Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை - 14 | 29-11-2004 | திங்கட்கிழமை | ஓசை -285


கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-10705)

## ஆண்டான்குளத்தில் மாவீரர் நினைவாலயம்



(மடு)

மன்னார் ஆண்டான்குளப் பகுதியில் கேணல் ஜெயம் அவர்களால் மாவீரர் நினைவாலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களின் திருவுருவப்படங்களை வைத்து ஆண்டான்குளப் பகுதியில் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயம் நேற்று முன்தினம் மாவீரர் நாளன்று வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம்

(12ஆம் பக்கம் பார்க்க)

அமெரிக்காவில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வில்...





# அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடாவில் உணர்வுபூர்வ மாவீரர் நாள் நிகழ்வுகள்!

## மாவீரர் புகழ் சொல்லும் கலை நிகழ்ச்சிகள்

(சிட்னி, நியூயோர்க், ரொறன்ரோ)

அமெரிக்கா, கடனா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் மாவீரர் நாள் நிகழ்வுகள் உணர்பூர்வமாக அங்கு வாழும் ஈழத் தமிழ் மக்களினால் அனுஷ்டிக்கப்பட்டன. இந்நிகழ்வின்போது மாவீரர் தொடர்பான கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

அவுஸ்திரேலியா நியூசவுத் வேல்ஸ் மாநிலத்தின் சிட்னி மாநகரத்தில் மாவீரர்நாள் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை வெகு உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

தமிழீழ தேசியக்கொடியேற்றம், அகவணக்கம், ஈகச்சுடரேற்றல், மாவீரர் மலர் வணக்கம் ஆகிய நிகழ்வுகளைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் அவுஸ்திரேலிய பரப்புரைப் பொறுப்பாளர் சபேசன் சிறப்புரையாற்றினார். தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் பிரபல ஓவியர் புகழேந்தி அவர்களின் உரையும் இடம்பெற்றது. தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதிய 'சமரும் சமாதானமும்' (The War and Peace) என்ற நூலை அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு தளபதி பானு திடீர் விஜயம்

### மாவீரர் நினைவாலயத்தில் அஞ்சலி

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு நேற்று களுவாஞ் சிகுடி பட்டிருப்பு தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவாலயத்திற்கு சென்று அங்கு வைக்கப்பட்டுள்ள மாவீரர்களின் திருவுருவப் படத்தினை பார்வையிட்டுள்ளார். மட்டு. -அம்பாறை சிறப்புத் தளபதியாக நியமிக்கப்பட்ட பின்பு முதன் முதலாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குசென்றுகலந்து கொண்ட நிகழ்வு இதுவாகும். தளபதி பானு அவர்களுடன் மட்டு. அம்பாறை அரசியல்துறைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் தின வன்முறைகளைக் கண்டித்து திருகோணமலையில் இன்று ஹர்த்தால்

மாவீரர் வாரத்தின் போது யாழ்ப்பாணம்-வல்வெட்டித்துறையில் இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் வவுனியா மற்றும் மன்னாரில் வன்னி மாவட்ட எம்.பி வினோநோகராதலிங்கம் உட்பட பொது மக்கள் அரசாங்கப் படையினரால் தாக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் திருமலையில் நடைபெற்ற அராஜகச் செயல்கள் ஆகியவற்றைக் கண்டித்து திருமலை நகரில் இன்று திங்கட்கிழமை பூரண ஹர்த்தால் நடத்தும்படி திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

அரச அலுவலகங்கள், தனியார்வர்த்தக ஸ்தாபனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் தியேட்டர்கள் யாவற்றையும் மூடிவிடுவதுடன் அரச போக்குவரத்து வாகனங்கள் உந்துருளிகள் முச்சக்கர வண்டிகள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் உட்பட அனைத்து வாகனங்களையும் போக்குவரத்தில் ஈடுபடவேண்டாம் என்றும் திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்

(12ஆம் பக்கம் பார்க்க)

### – சிறிலங்கா அரசு – புலிகள் விவகாரத்தில் –

## பக்கசார்பாக செயற்படுவதான குற்றச்சாட்டுக்கு நோர்வே மறுப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் நோர்வே அரசு பக்கசார்பாகச் செயற்படுவதான குற்றச்சாட்டை நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் மறுத்துள்ளார்.

அண்மைக்காலத்தில் சமாதான முயற்சிகளில் நோர்வே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருவதாக சனாதிபதி சந்திரிகா உட்பட பலர் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளமை தெரிந்ததே. அனுராதபுரத்தில் கலாசார மையம் ஒன்றை நேற்றுத் திறந்துவைத்து உரையாற்றும்போதே நோர்வேத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு விசாரணை

(வவுனியா)

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் 25,26 திகதி இரவு வேளைகளில் மக்களால் தாக்கி அழிக்கப்பட்ட பொலிசாரின் எட்டு காவலரண் தொடர்பாக நேற்று போர் நிறுத்த கண்காணிப்பு குழுவினர் விசாரணைகளினை மேற்கொண்டு உள்ளனர். காவலரண்கள் தாக்கப்பட்டுள்ளதுடன், தீயிட் டும் கொழுத்தப்பட்டுள்ளது 25ஆம் திகதி வேப்பங்குளம் பகுதியில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் போரா? சமாதானமா? என்பதை சனாதிபதி சந்திரிகாதான் தீர்மானிக்க வேண்டும்!



### லண்டன் மாவீரர் தின உரையில் அன்ரன் பாலசிங்கம்

(லண்டன்)

"பிரபாகரன் போருக்குத் தயாராகிவிட்டார். போரா? சமாதானமா? என்பதை சந்திரிகாதான் தீர்மானிக்க வேண்டும். தலைவர் பிரபாகரன் அவர்கள் கேட்பது போல் ஒன்று நீங்கள் பேச வேண்டும். இல்லையேல் நாங்கள் விடுதலைப்போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்தார்.

லண்டனிலுள்ள எக்சல் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு தமிழீழத்தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் மாவீரர் தின உரைக்கு விளக்க உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

அவர் தனதுரையில், தலைவர் பிரபாகரன் அவர்கள் இன்று ஒரு முக்கியமான செய்தியொன்றை அறிவித்திருக்கிறார். மிகவும் பாரதூரமான செய்தி. அதாவது சந்திரிகா அம்மையாருக்கு

(2ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில்...

ஒரு எச்சரிக்கை விடுத்து தொடர்ந்து பேச்சுவார்த்தையில் இழுபறி இருக்க முடியாது. பொறுத்தது போதும். போராட்டத்திற்கு தயாராக இருக்கிறோம் என்று ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். சிங்கள தேசத்தில் எல்லோரும் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ விடுதலைப் புலிகள் இயக்கம் பலவீனம் அடைந்து விட்டது. உள்முரண்பாடுகள் அதிகரித்துவிட்டது. புலிகள் குட்டக் குட்டக் குனிந்து கொண்டிருகிறார்கள் என்று எண்ணி நினைத்தவர்களுக்கு தலைவர் விடுத்துள்ள எச்சரிக்கை இந்த உரை. அதாவது நாங்கள் கேட்பது போல் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை திட்டத்தின் அடிப்படையில் பேசித் தீர்வு காண இறுதி சந்தர்ப்பம் இது என்பதுதான்.

எமது அவசர கோரிக்கையை நிராகரித்து மேலும் இழுத்தடிப்பு செய்தால் நாங்கள்... எமது தேசத்தின் விடுதலைக்கான போராட்டதை ஆரம்பிப்போம் என்று உறுதிபடச் சொல்லி இருக்கிறார்.

நான் சமீபத்தில் கொழும்பு போயிருந்தேன். முன்னைப் போல் அல்லாது எங்களுக்கு வி.ஐ.பி அந்தஸ்து இல்லாமல் ஒரு அறையில் அடைக்கப்பட்டிருந்தோம். எங்களுக்கு சிறுநீர் கழிக்கக்கூட அப்போது சிக்கல். போர்த்துக்கேயர் காலத்துக்கு ஹெலி ஒன்றில் ஏற்றப்பட்டோம். அது நிலத்திலிருந்து எழும்பவே அரை மணித்தியாலமானது. அதன் பிறகு வன்னியில் தலைவரைச் சந்தித்த போது இனிமேல் ஹெலியில் வரமாட்டேன். மாட்டு வண்டியில் வருகிறேன் என்று சொன்னேன்.

வழமையாகத் தலைவர் பேசுகிற உரைக்கு நான் விளக்கம் கொடுப்பது வழக்கம். இந்த முறையும் அதையே செய்கிறேன். முக்கியமான அறிவிப்புகளைத் தலைவர் தனது உரையில் விடுத்துள்ளார். தலைவர் என்ன நோக்கத்தோடு? அவர் என்ன செய்ய உத்தேசித்துள்ளார் என்பதை விளக்க உள்ளேன்.

முதலாவது சொல்கிறார் நாங்கள், எமது மக்கள் ஒரு அரசியல் வெறுமைக்குள் வாழ்ந்து வருகிறோம். போரும் இல்லை-நிலையான சமாதானமும் இல்லை. இயல்பு நிலையுமில்லை. இடைக் காலத் தீர்வும் இல்லை. அரசியல் பிரச்சினைக்கான நிரந்தத் தீர்வும் இல்லை. இதைத் தொடர முடியாது. ஒன்று பேச வேண்டும். அல்லது சண்டைபோட வேண்டும்.

ஆனால் தென்னிலங்கையில் சிங்களவர் சந்தோசமாக வாழுகிறார்கள். தமிழர்களோ அவதிப் பட்டிருகிறார்கள். இப்படியான சூழலில் இந்தநிலை எப்படித் தொடர முடியும் என்று போராளிகள் கேள்வி எழுப்புகிறார்கள்.

நான் தலைவருடன் பேசிய போது, இப்படியே போக முடியாது போராட்டமே இல்லாது போய்விடும். சரியான பலத்துடன் நாங்கள் இருக்கிறோம். எங்களை அசைக்க முடியாது சின்ன சலசலப்புகள் எல்லாம் இருந்தாலும் கூட நிலைமை கட்டுப்பாடடுக்குள் இருக்கிறது. நாங்கள் எதுக்கும் தயாராக இருக்கிறோம். எனவே இது தொடர முடியாது என்றார்.

நான் வன்னியில் இருக்கும் போது நோர்வே வெளியுறவு அமைச்சரிடமும் இதைத்தான் சொன்னார். இந்த நிலையை நாங்கள் அனுமதிக்க முடியாது என்றார் தலைவர்.

எமது விடுதலை இயக்கம் போர் நிறுத்தம் செய்து மூன்று வருடங்களாகிறது. அதாவது 30 ஆண்டுகளாக போர் புரிந்து கிட்டத்தட்ட 18 ஆயிரம் போராளிகளைப் பலி கொடுத்து பெரிய யுத்தம் நடந்து இருக்கிறது. மூன்று வருடமாக அமைதி காக்கிறோம். ஏனெனில் உலக நாடுகளின் அழுத்தம். நிதியுதவி தருகிறோம். தேசத்தையும் அகதிகளாக வாழ்கிற தமிழர்களின் வாழ்க்கையையும் மீளக் கட்டியெழுப்புங்கள் என்றார்கள்.

அதனால்தான் பேச்சுக்குப் போனோம். நான்தான் தலைமை தாங்கினேன். இப்பேச்சுகளில் குழுக்கள், உபகுழுக்கள் எல்லாம் அமைக்கப்பட்டன. ஆனால் எல்லாமே செத்துப் போய்விட்டன. அதிகாரம் எதுவும் இல்லாமல் அம்மா கையில் அதிகாரம் இருந்த சூழலில் சும்மா போய் ரணிலிடம் பேச்சு மேசையில் கதைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது தலைவர் என்னிடம் கேட்டார் என்ன பாலா அண்ணை? உப குழுக்கள், பேச்சுகள் என்று உருப்படியான செயற்பாடு இல்லை என்றார். தொடர்ந்து மக்கள் அவதிப்படுகிறார்கள். நிதி உதவி எதுவும் இல்லை என்றார். மேலும் பில்லியன் டொலர் உதவி என்றெல்லாம் சொல்கிறார்கள். 10 ரூபாய் கூட இல்லையே என்ன விளையாட்டு இது என்றார்.

இதையடுத்து இந்தப் பேச்சுவார்த்தையை இடை நிறுத்தம் செய்தோம். நாங்கள் பேச்சுக்களை முறிக்கவில்லை. அப்போதுதான் இடைக்கால நிர்வாகம் கேட்டோம். இந்த இடைக்கால நிர்வாகம் மூலம் உலக நாடுகளின் உதவியை பயன்படுத்த நினைத்தோம். ரணிலிடமும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையைக் கோரினோம். அவரும் மாறி மாறி மூன்று இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான வரைபுகளைத் தந்தார். அதில் ஒருவிதமான உருப்படியான அதிகாரமும் இல்லை. நாங்கள் தொடர்ந்து அதை நிராகரித்தால் உலக நாடுகள் நாங்கள் வேண்டும் என்றே நிராகரிப்பதாக எண்ணுவார்கள். அதனால்தான் நாங்கள் இடக்கால தன்னாட்சி அதிகாரசபை அறிக்கையை வெளியிட்டோம்.

இதைத் தயாரித்து கடந்த வருடம் நவம்பர் முதலாம் திகதி ரணிலிடம் கொடுத்தோம். ரணில் என்ன செய்தார்?. இதைப் பற்றி பேசத் தயார். வித்தியாசமாக இருக்கிறது. இதனடிப்படையில் பேசுவோம் என்றார். ஆனால் சந்திரிகா அம்மையாரோ இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான அறிக்கை அளித்த நான்கு நாட்களிலே ரணில் அரசின் முக்கிய மூன்று அமைச்சுகளைப் பறித்து ரணில் அரசை ஆட்டம் காண வைத்தார். பின்னர் பாராளுமன்றத்தைக் கலைத்து ரணில் அரசைக் கவிழ்த்து தேர்தலை நடத்தினார் சந்திரிகா அம்மையார்.

தேர்தல் நடந்தது. தெற்கிலும் தமிழீழத்திலும் ஒரு பெரிய மாற்றம் நடந்தது. தெற்கிலோ முதல் முறையாக சிங்களப் பேரினவாத சக்திகள், தமிழ் விரோத ஜே.வி.பி, ஜாதிகஹெல உறுமய போன்ற கட்சிகள் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று பாராளுமன்றத்திற்குள் நுழைந்தன. சந்திரிகாவோ, அவர்களைக் கட்டியணைத்து கூட்டமைத்து ஆட்சி அமைத்தார். இவர்கள் அனைவரும் சமாதானப் பேச்சுகள் மற்றும் நோர்வே தலையீட்டுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தியவர்கள். அதே நேரத்தில் தமிழீழத்திலோ நீண்ட காலத்திற்குப் பிறகு தமிழீழ விடுதலைப் புலிகளே ஏகப் பிரதிநிதிகள் என்பதை ஏற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு 22 ஆசனங்களை தமிழ் மக்கள் அளித்தனர்.

தென்னிலங்கையில் சிங்களத் தேசியவாதம் தலை தூக்கியது. தமிழீழத்தில் தமிழ்த் தேசியம் வெற்றி பெற்றது. அதைத்தான் தலைவர் தெளிவாகச் சொல்கிறார். இந்தத் தேர்தல், சிங்கள-தமிழர் தேசங்களில் முரண்பட்ட நிலையை உருவாக்கியது என்றார். விடுதலைப் புலிகள் முன் வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்குத் தமிழ் மக்கள் அங்கீகாரம் அளித்தனர் என்றார்.

தென் இலங்கையில் சிங்களப் பேரினவாதிகள் ஆட்சிப் பீடத்தில் இருக்கின்றனர். அப்படியிருந்தும் கூட சமாதான முயற்சியை நாங்கள் கைவிடவில்லை. இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேசலாம் என்று கூறினோம். ஆனால் சந்திரிகாவிற்கோ இடைக்காலத் தீர்வு பற்றி பேச தயக்கம். ஜே.வி.பி. அங்கே ஆட்சியில் இருக்கிறது. தீவிர மதவாத, இனவாத, பழமைவாத கம்யூனிசமாக குளறுபடியான இனவாதக் கட்சி அது. அவர்கள் வேண்டாம் என்று சொல்கிறார்கள். இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேசினால் உன்னை விட்டுவிட்டுப் போய்விடுவோம் என்றார்கள். அதுதான் அம்மாவுக்கு சிக்கல்.

ஆனால் அம்மாவுக்கு வேறு ஒரு சிக்கலும் இருக்கிறது. உலக நாடுகள் ஏகப்பட்ட நிதியை வைத்துக் கொண்டு சொல்கிறது. புலிகளுடன் சமாதானப் பேச்சுக்குப் போய் தீர்வு கண்டால்தான் பெருந்தொகை நிதி உதவி கிடைக்கும் என்ற நிர்ப்பந்தம் இருந்தது.

தான் ஒரு சமாதான தேவதை. தமிழ் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவேன் என்று ஐ.நா., அமெரிக்கா, இந்தியா, கடைசியாக ஈரான் போய் பேசியிருக்கிறார். அம்மா சமாதான வேடம் போட்டுத் திரிகிறார். இதனிடையே சிறிலங்கா பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இப்படியாகப் பல நெருக்கடிகளைத் தீர்க்க புலிகளுடன் அவர் பேசியாக வேண்டிய நிலை. ஆனால் கம்யூனிச பிசாசுகள் (ஜே.வி.பி) அவரை விடவில்லை. இதற்கு அம்மையார் கண்டு பிடித்த தீர்வுதான் இடைக்கால தீர்வோடு இனப்பிரச்சினைக்கு இறுதியான தீர்வு காணுதல் வேண்டும் என்கிற பேச்சு. இனவாத, தீவிரவாத சக்தியோடு கூட்டு வைத்துக் கொண்டு இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணுதல் என்றால் எப்படி? இடைக்காலத் தீர்வை விட்டு நிரந்தத்தீர்வுக்கு சந்திரிகா அம்மையார் வருவதற்கான காரணங்களை தலைவர் அறிக்கையில் சொல்லியிருக்கிறார். இதன் மூலம் நிரந்தரத்தீர்வுக்கு இழுத்தடித்து விட்டு பேச்சுவார்த்தை நடத்துகிறோம் என்ற அடிப்படையில் உலக நிதி உதவி பெறுதல் போன்ற நோக்கங் களுடன்தான் இதை சந்திரிகா பேசுகிறார் என்றார்.

நாங்கள் ஏன் ஒரு இடைக்கால நிர்வாகத்தை கோருகிறோம் என்பதற்கான காரணத்தை தலைவர் தனது உரையில் தெளிவாகக் கூறியுள்ளார். மக்களின் அவல நிலைதான் என்ற அடிப்படையில் இடைக்கால நிர்வாகத்தைத் தலைவர் கூறுகிறார். தலைவர் கூறியது போல் மொழியுரிமை, பிரதேச உரிமை, சமஷ்டி உரிமை, கூட்டாட்சி போன்றவற்றை 50 ஆண்டுகாலமாக பேசிவிட்டோம்.

இப்போது நாங்கள் அரசியல் கட்சி அல்ல. சமஷ்டி கட்சி அல்ல. சிங்களவனிடம் கையேந்தி நிற்க எங்களுக்குத் தனி அரசு இருக்கிறது. எங்களுக்கு சிங்கள இராணுவத்துக்குச் சமமான வலுவான இராணுவம் இருக்கிறது. கடற்படை இருக்கிறது நீதி, பொலிஸ் உள்ளிட்ட அரசுக்கான சகல கட்டுமானமும் உண்டு. நாங்கள் அரசை நடத்துகிறோம். நாங்கள் நிரந்த அரசு வைத்துள்ளோம். இடைக்கால நிர்வாகம் கேட்பது சர்வதேச அங்கீகாரத்துக்குத்தான்.

காலம் காலமாக இடம் பெயர்ந்த- வெளிநாடுகளில் வாழும் மக்களால் நாங்கள் கட்டியெழுப்பிய இராணுவத்தால் அரசை உருவாக்கி இருக்கிறோம் நாங்கள் ஒன்றும் வெறுங்கையோடு நிற்கவில்லை. சிங்களவன் தான் இப்போது பயப்பட வேண்டும். நாங்கள் சோர்ந்து போய்விடவில்லை. எங்கள் போராட்டம் தொடர்ந்து நடக்கும். சிங்களவர்களுக்கு தலைவர் கொடுத்துள்ள முக்கிய அடி இதுதான். தமிழ் மக்களுக்கு தீர்வு காணும் வகையில் உங்களுக்கான திட்டம் எது இருக்கிறது என்பதுதான் அது. வடக்கு கிழக்கில் வாழும் இஸ்லாமியர் உள்ளிட்ட தமிழ் மக்களை உள்ளடக்கிய தமிழர் வரலாற்றுத் தாயகம், தமிழர்கள் தேசிய இனம், தனித்த மொழி, ஒருங்கிணைந்த பொருளியல் வாழ்வு, மக்கள் இனக்கட்டமைப்பு என்ற உணர்வு இருக்கிறது. ஒரு தேசிய இனமாக திகழ்ந்து வரும் தமிழர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்துள்ள சுய நிர்ணய உரிமை உள்ளது. அதாவது எங்களது அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கிற உரிமை அது. அதாவது பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமை எங்களுக்கு உண்டு. இதை சிங்களவர்கள் அங்கீகரிக்கிறார்களா என்கிறார் தலைவர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமானால் உங்களது நிலையை வெளிப்படுத்துங்கள் என்கிறார் தலைவர். இதைத்தான் தலைவர் தனது உரையில் விளக்கியுள்ளார். அடுத்து சந்திரிகாவுக்கு அவசர அழைப்பு விடுகிறார். அதாவது நாங்கள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை நிபந்தனையற்ற அடிப்படையில் ஏற்று பேச்சுக்கு வரவேண்டும். ஆனால் அதைவிடுத்து நிராகரித்து, காலத்தை தட்டிக் கழித்து ஏமாற்ற விளைவீர்கள் என்றால் நாங்கள் எமது போராட்டத்தை தொடங்குவோம் என்றார்.

பிரபாகரன் போருக்குத் தயாராகிவிட்டார். போரா? சமாதானமா என்பதை சந்திரிகாதான் தீர்மானிக்க வேண்டும். தலைவர் கேட்டதைப் போல் ஒன்று நீங்கள் பேச வேண்டும், இல்லையேல் நாங்கள் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியல்லை என்றார் அன்ரன் பாலசிங்கம்

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

கிளி.வயர்லெஸ் A-9 வீதியில் சுமார் 150 மீற்றர்தூரத்தில் நல்ல சுற்றாடலும் அமைதியான சூழலும் குடியிருப்பதற்கும் சிறு கைத்தொழிற்சாலை நடாத்துவதற்கும் சிறந்த 3/4 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. விலை $5^{1}/_{2}$ லட்சம் தொடர்புகட்கு: அ.இராஜநாயகம், இல:100, விவேகானந்த நகர், கிளிநொச்சி. 5319)

### தவறிவிட்டது

யேசுராசா வித்தி என்பவரது புகைப்படக் கருவி விசுவமடு துயிலும் இல்லத்திற்கும், தேராவில குளத்திற்கும் இடையில் 27.11.2004 அன்று தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப் படும். தகவல் யே.வித்தி. (5318)

### தவறிவிட்டது

வல்லி ஜெகநாதன் என்பவரது கறுப்பு பாக் 21.11.2004 அன்று கரடிப்போக்குச் சந்திக்கும் பரந்தனுக்குமிடையில் தவற விடப்பட்டுள்ளது. அதற்குள் (தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம், பயண அனுமதி அட்டை ஆகியவை இருந்தது. இதைக் கண்டெடுத்தவர்கள் கிளி.ஈழநாதம் பணிமனையில் அல்லது கிளி.காவல் பணிமனையில் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். (5063)

### வேழன் பதிப்பகம்

உங்கள் சகலவிதமான அச்சக வேலைகளையும் கணினிமூலம் வடிவமைத்து ஓவ்செற்றில் அச்சிட்டுப்பெற்றுக்கொள்ள வேழன் பதிப்பகம். கனகபுரம் வீதி, கிளிநொச்சி. (5284)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் பொன்னுத்துரை அன்னம்மா


அமரர் பொன்னுத்துரை அன்னம்மா கிளிநொச்சி முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் அங்கத்தவரான பொ.தெய்வவேல் பரமநாதன் (ராசன்) ஆகியோரின் அன்புத் தாயார் பொன்னுத்துரை அன்னம்மா அவர்கள் 27-11-2004 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் இழப்பால் துயருற்று இருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
கிளி.முச்சக்கர வண்டி
உ[illegible]ரிமையாளர் சங்கம்
[illegible]நொச்சி.

## திருமண வரவேற்பும் விருந்துபசார அழைப்பும்

அன்புடையீர்!
காலம்: 29.11.2004 திங்கட்கிழமை
நேரம்: மு.ப.10.30 தொடக்கம் நடைபெறும்
இடம்: கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு மண்டபம் (ஏ-9சாலை, கிளி.)

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறைச்செல்வன்
ஜீவா



எமது ஏக புத்திரி
திருநிறைச்செல்வி
நவீனா

இவர்களது திருமண வரவேற்பு விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு மதியபோசனத்திலும் பங்குபற்றி மணமக்களை ஆசீர்வதிக்குமாறு உறவினர்கள், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்.

திரு.திருமதி.ப.செல்வரத்தினம்
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

திரு.மா.சிவபாலன்
இல1132, திருநகர்,
கிளிநொச்சி.

(4938)

# ஆப்கான் எல்லையில் இருந்து பாக்.படையினர் வாபஸ்

(இஸ்லாமாபாத்)

ஆப்கானிஸ்தான் எல்லை அருகேயுள்ள வானா பகுதியில் இருந்து படைகள் வாபஸ் பெறப்படுவதாக பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

அல்-ஹைதா தீவிரவாதிகளுக்கு எதிராக அப்பகுதியில் பாக்.இராணுவம் கடந்த பல மாதங்களாக நடவடிக்கை எடுத்து வந்தது.

அப்பகுதியைச் சேர்ந்த பழங்குடி மக்களின் தலைவர்களும், போராளி அமைப்புக்களின் தலைவர்களும் இனி தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் தருவதில்லை என உறுதி அளித்ததைத் தொடர்ந்து பாக்.இராணுவம் அப்பகுதியில் இருந்து வாபஸ் பெறப்படுகிறது.



பாக்தாத்தில்அமெரிக்க கடற்படையின் விசேடபடையினரும், ஈராக் தேசியப் படை அங்கத்தவர்களும் ஒன்பது தீவிரவாதிகளைக் கைது செய்து கொண்டு பெருந்தொகையான ஆயுதங்களையும் கைப்பற்றிக்கொண்டும் திரும்புகின்றனர்.

## சீனாவில் பஸ் விபத்து 25 பேர் பலி,24 பேர் காயம்

(பீஜிங்)

சீனாவின் ஷான்சி மாகாணத்தில் ஆற்றில் பஸ் விழுந்ததில் 25 பேர் உயிரிழந்தனர். 24 பேர் காயமடைந்தனர். சனிக்கிழமை அதிகாலை இந்தச் சம்பவம் நடைபெற்றது. சாலையில் வந்து கொண்டிருந்த பஸ் திடீரென நிலை தடுமாறி ஆற்றுக்குள் விழுந்ததாக பீஜிங் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கரையோரப் பாதுகாப்புக்கென அவுஸ் அதிவேக ரோந்து கப்பல் கொள்வனவு

அவுஸ்திரேலியாவின் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென 27 அதிவேக கடற்படைக் கப்பல்கள் 2 கோடியே 17 இலட்சம் ரூபா செலவில் பெற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன.

இதனடிப்படையில் அடுத்த வருட நடுப்பகுதியளவில் முதலாவது கப்பல் சிட்னி துறை முகத்தைச் சென்றடையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் துறையின் அமைச்சர் ஜோன் பெற்றிக்சென் இது தொடர்பாக தகவல் தருகையில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராகவும், சட்டவிரோத குடிவரவாளர்களுக்கெதிராகவும் நடவடிக்கை மேற்கொள்வதில் இக்கப்பல்கள் ஈடுபடுமெனவும் தெரிவித்துள்ளார்.

# அதிகரித்து வரும் சிறைச்சாலை சித்திரவதை இங்கிலாந்துக்கு ஐ.நா.சபை கண்டனம்

(ஜெனீவா)

**இங்கிலாந்து நாட்டில் சிறைச்சாலைகளில் சித்திரவதை சம்பவங்கள் அதிகரித்து வருவதற்கு ஐ.நா சபையின் சித்திரவதை தடுப்புக்குழு கண்டனம் தெரிவித்து உள்ளது.**

காவல் கைதிகளின் மரணங்கள் அதிகரித்து வருவதையும் கண்டித்துள்ள இந்த அமைப்பு, சிறைக் கொடுமைகளை தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்தி உள்ளது. இதேபோல் கிரீஸ், ஆர்ஜென்டினா ஆகிய நாடுகளுக்கும் இந்த அமைப்பு கண்டனம் தெரிவித்து உள்ளது.



ஈராக்கிற்கான அமெரிக்கத்தூதுவர் ஜோன் நிக்ரோபொண்டி(கெல்மெற்) ஈராக் கைத்தொழில் அமைச்சர் கஜெம்அல கசானி ஆகியோர் ஈராக் பலூஜா நகரிற்குச் செல்கின்றனர்.

# ஈராக்கில் தொடர் குண்டுவெடிப்பு மூவர்பலி; பதினொரு பேர் படுகாயம்

(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் சனிக்கிழமை 3 இடங்களில் குண்டு வெடித்ததில் 3 பேர் பலியானதுடன், 11 பேர் காயமடைந்தனர். பாக்தாத் நகரின் அல்ரஷீத் வீதியில் மத்திய வங்கிக்கு அருகே ஒரு தள்ளுவண்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் இரண்டு பேர் இறந்தனர். 10 பேர் காயமடைந்தனர்.

சர்வதேச விமானநிலையம் அருகே வீதியோரத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்து, அமெரிக்க இராணுவ வாகனம் சேதமடைந்தது. தெற்கு பாக்தாத்தில் வீதியோரத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். ஒருவர் காயமடைந்தார்.

# கட்டுப்பாட்டுக் கோட்டை நிரந்தர எல்லையாக பாகிஸ்தான் ஒருபோதும் ஏற்காது

**-பாகிஸ்தான் பிரதமர் சவுகத் அஜீஸ்**

(இஸ்லாமாபாத்)

கட்டுப்பாடு எல்லைக்கோட்டை நிரந்தர எல்லையாக பாகிஸ்தான் ஒரு போதும் ஏற்காது என பாகிஸ்தான் பிரதமர் சவுகத் அஜீஸ் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் சவுகத் அஜீஸ் சமீபத்தில் இந்தியாவிற்குப் பயணம் செய்து திரும்பினார். பயண விபரங்களை பாகிஸ்தான் அமைச்சர்களுக்கு விளக்கினார்.

காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் நிலையை இந்தியாவுக்கு தெளிவாக விளக்கினேன். கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டை பாகிஸ்தான் அங்கீகரிக்கவும் இல்லை. அதை நிரந்தர எல்லையாக ஏற்கப் போவதும் இல்லை. எப்படியானாலும் பிரச்சினைக்கு அது மட்டுமே தீர்வல்ல. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் இதை தெளிவு படுத்தினேன் என்றார்.

## 84 கோடி மதிப்புள்ள போதைப் பொருள் சிக்கியது

(பிரான்ஸ்)

பிரான்ஸ் நாட்டில் ரூ.84 கோடி மதிப்புள்ள போதைப் பொருளை (கோகைன்)வானில் கடத்திச் சென்றவர் பிடிபட்டார். ஸ்பெயின் நாட்டு எல்லை அருகே வானை சோதனை போட்ட போது இந்தப் போதை பொருட்கள் பொலீசாரிடம் சிக்கின.

அவற்றை கடத்திச் சென்றதாக ஆர்ஜென்டீனா நாட்டைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

# ஜோர்ஜ் புஷ்சை கொல்லும் முயற்சி கொலம்பிய இராணுவத்தால் முறியடிப்பு

(பகோட்டா)

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் கடந்த வாரம் கொலம்பியா சென்றார். அவர் அங்கு சுற்றுப்பயணம் செய்யும் போது அவரைக் கொலை செய்ய தீவிரவாதிகள் முயற்சி செய்தது இப்போது தெரிய வந்துள்ளது.

கொலம்பியாவில் 17,000 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் உள்ளனர். பல்வேறு குழுக்களாகப் பிரிந்துசெயற்படும் இந்த தீவிரவாதிகளுக்கு அவர்களின் தலைவர்கள் ஜோர்ஜ் புஷ்சை தீர்த்துக் கட்டும்படி உத்தரவிட்டு இருந்தனர். ஆனால் தீவிரவாதிகளின் இந்த சதித் திட்டத்தை கொலம்பிய இராணுவம் முறியடித்து விட்டது. கடத்தல், போதை பொருள் உற்பத்தி ஆகியவற்றை ஒடுக்க கொலம்பிய அரசுக்கு அமெரிக்கா உதவி செய்து வருவதால் ஜோர்ஜ் புஷ் மீது தீவிரவாதிகள் கும்பல்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டுள்ளது.கொலம்பிய அதிபர் உரிபியின் தந்தையும் கடந்த 1980 ஆம் ஆண்டில் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டார்.

# டயானாவுக்கு இன்னொரு காதலர் உண்டு தொலைக்காட்சியில் பரபரப்பான நிகழ்ச்சி

(நியூயோர்க்)

இங்கிலாந்து இளவரசி டயானா, கணவர் சார்ள்சை விவகாரத்து செய்தபின் கடந்த 1997 ஆம் ஆண்டு பாரிசில் நடந்த விபத்தில் பலியானார். டயானா, சார்ள்ஸ் இருவருக்கும் திருமணத்துக்குப் பிறகு வேறு சிலருடன் இருந்த ‘தொடர்புகள்’ பற்றி ஏற்கனவே பரபரப்பான தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்த நிலையில், இளவரசி டயானா அரண்மனையில் பொலிஸ் அதிகாரியாக பணி புரிந்த பாரிமன்னகி என்பவரையும் காதலித்த தகவல் இப்போது வெளியாகி உள்ளது. இந்தத் தகவலை, ஒரு வீடியோ பேட்டியில் டயானாவே வெளியிட்டு இருக்கிறார். இந்தப் புதிய காதலர் உந்துருளி, விபத்தில் இறந்ததாகக் கூறப்பட்டாலும், அவர் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என்றும் டயானா கூறி இருக்கிறார்.

இது பற்றிய டயானாவின் வீடியோ பேட்டி தொகுப்பு என்பிசி. டி.வி.யில் இன்று திங்கட்கிழமையும், டிசம்பர் 6 ஆம் திகதியும் இரண்டு பாகமாக ஒளிபரப்பாகிறது.



சீனாவின் சான்சி மாகாணத்தில் நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வாயு வெடிப்பின் பின் சக ஊழியர்களால் மீட்கப்பட்ட ஊழியர் ஒருவர் தளத்திற்குத் திரும்புகிறார்.



ஈராக்கின் ஒரு கட்டடத்தில் உயிரியல் இரசாயன ஆயுதங்கள் தயாரிக்கப்பயன்படுத்தப்படும் உயிரியல் இரசாயனப் பொருட்கள் ஈராக்கியத் தேசியப்படையினரால் கண்டு பிடிக்கப்பட்டு ஏற்றப்படுகின்றது.

# பருவமழை தொடர்வதால் வெள்ள அனர்த்தம்

(உடையார் கட்டு)

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் பருவமழை காரணமாகப் பல பகுதிகளில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டு வருகிறது. பருவமழை காரணமாக உடையார்கட்டு குரவில் பகுதியில் குடிமனைகளிற்குள் வெள்ளம் புகுந்ததால் முப்பதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குரவில் பாடசாலையினுள் தஞ்சமடைந்துள்ளன.

இதேவேளை இப்பகுதியில் ஐந்து வீடுகளின் சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. இப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பாடசாலையில் தங்கியுள்ளவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவனமும் உதவி செய்வதற்கான முன்னோடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. (19)



ஓயாத அலைகள்-2 நடவடிக்கை மூலம் கிளிநகர் மீட்புச்சமரில் வீரச்சாவடைந்த 398 மாவீரர்களையும் நினைவு கூரும் வகையில் கிளிநொச்சிக்குளச் சந்தியில் நிறுவப்பட்ட நினைவுத்தூபியும், கல்[illegible]டும் நேற்று முன்தினம் திரைநீக்கம் செய்து வைக்கப்பெறுவதனை படங்களில் காணலாம். (படங்கள் சோதி)

## கடல் கொந்தளிப்பு

மட்டக்களப்பு முதல் பொத்துவில் வரையான கடல்பரப்பில் ஏற்பட்டுள்ள பாரிய கடல் கொந்தளிப்பு காரணமாக மீனவர்கள் கடந்த சில வாரங்களாக கடலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பிரதேசங்களில் கடல் மீனுக்கு நல்ல கிராக்கியும் ஏற்பட்டுள்ளது.

# பொதுமக்கள் மீதான படையினரின் தாக்குதல் இனிமேலும் தொடர அனுமதிக்க முடியாது


–மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்

**பொதுமக்கள் மீதான தாக்குதலைப் படையினர் உடனடியாக நிறுத்த வேண்டும் அவ்வாறான தாக்குதலை இனிமேலும் தொடர அனுமதிக்க முடியாது என மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்தார்.**

மன்னாரிலும் வவுனியாவிலும் மக்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக தமிழ் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் ஆயர் மேலும் தெரிவிக்கையில்,

மாவீரர் தின வைபவங்களில் புலிக் கொடியைப் பொதுமக்களும், புலிகளும் ஏற்றுவதில் படையினர் முரண்பட வேண்டிய அவசியம் இல்லை. அதுதொடர்பாக அவர்களுக்குப் பிரச்சினை இருக்குமானால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டிருக்கலாம். பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டிய அவசியமும் இல்லை.

யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் உள்ளவேளை படையினர் அதற்கு மதிப்புக்கொடுக்க வேண்டும். பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் படையினர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். எனவேதான் போர்நிறுத்த கண்காணிப்புக்குழு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயம் தொடர்பாக நோர்வே அரசாங்கமும் கவனம் செலுத்த வேண்டும். சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவுடனும், இராணுவ உயர் அதிகாரிகளுடனும் மன்னார் சம்பவம் பற்றி கலந்துரையாடினேன். சாதகமான பதில் எதனையும் அவர்கள் வழங்கவில்லை. இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் குறித்து முன்னரும் பல தடவைகள் நான் ஜயந்ததனபாலவிடம் சுட்டிக் காட்டியிருந்தேன். ஆனால் படையினரைக் கட்டுப்படுத்துவதற்கான சரியான நடவடிக்கைகள் எதனையும் சமாதானச் செயலகம் செய்யவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளாா.



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசமான பனங்காமம் பற்றுப் பகுதியில் கடந்த வியாழனன்று நண்பகல் 12 மணியளவில் திடீர் என எழுந்த சுழிக்காற்றினால் பனங்காமம் பலநோக்கு கூட்டுறவுச்சங்க அரிசி ஆலையின கட்டடமொன்றின் கூரைத் தகடுகள் காற்றினால் வீசப்பட்டன. அத்துடன் கூரைப்பகுதியில் போடப்பட்ட மரங்களும் முறிந்து சேதமாயின. அங்கு கடமையிலிருந்த முகாமையாளர் பணியாளர்கள் காற்றுப் பலமாகவீசும் போது வெளியே ஓடியதால் காயங்கள் ஏதுமின்றித் தப்பினர். (படம் அன்ரனி)

## எயிட்ஸ் கருத்தரங்கு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு வேணாவில் கிராமத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவு கிளை அனுசரணையில் எயிட்ஸ் ஆட் கொல்லி நோய் சம்பந்தமான கருத்தமர்வு வேணாவில் ஸ்ரீமுருகானந்தா வித்தியாலயத்தில் அதிபர் செல்வ நாயகம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இலங்கை செஞ்சிலுவை சங்கத்தலைவர் ஏ.கே மகாலிங்கம் எச்.ஐ.வி.பற்றி கருத்துரை நிகழ்த்தினார்.

இதனையடுத்து இ.செ.ச.முதலுதவி இணைப்பாளர் சு.ஸ்ரீரங்கன் உரையாற்றினார். இ.செ.ச பரப்புரை உத்தியோகத்தர் உரையாற்றியதையடுத்து நன்றியுரையை போர் எழுச்சிக்குழு தலைவர் ரவி நிகழ்த்தினார் இந்நிகழ்வில் அப்பிரதேச மக்கள் பயன் அடைந்தார்கள். (08)

கிளி.கரைச்சிப் பிரதேச சபையால் நடாத்தப்படும்


# முன்பள்ளியில் பெரும் இடநெருக்கடி எழுபது சிறார்களின் கல்வி பாதிப்பு!

(அலுவலகசெய்தியாளர்)

இடவசதி அற்ற காரணத்தினால் ஜெயந்திநகர் முன்பள்ளிச் சிறார்களின் கற்கைச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமையினால் மேற்படி முன்பள்ளியில் கல்விகற்று வந்த 70 சிறார்களின் ஆரம்பக்கல்வி கேள்விக் குறியாக அமைந்துள்ளது.

ஜெயந்திநகர் கிராம அபிவிருத்திச்சங்க வளாகத் தில் அமைக்கப்பெற்ற சிறிய கொட்டகையில் கரைச்சிப் பிரதேச சபையினரால் நடாத்தப்பெற்று வரும் மேற்படி முன்பள்ளியில் 70 சிறார்கள் கல்விகற்று வந்துள்ளனர்.

முன்பள்ளிக் கட்டட இடவசதி அற்றநிலையில் முன்பள்ளிக்கு முன்பாக உள்ள மரநிழலிலும் கிராம அபிவிருத்திச்சங்க கட்டடப் பகுதியிலும் வைத்துமே இதுவரை காலமும் மேற்படி பள்ளி மாணவர்களின் கற்கைச் செயற்பாடுகள் இடம்பெற்று வந்ததெனவும் மாரிகாலம் ஆரம்பமாவதைத் தொடர்ந்து கடந்த புரட்டாதி மாதம் 22 ஆம் திகதி முதல் முன்பள்ளிச் செயற்பாடுகள் இடை நிறுத்தப் பெற்றுள்ளமையின் காரணமாக முன்பள்ளியில் கல்விகற்று வந்த எழுபது சிறார்களின் ஆரம்பக்கல்வி தொடராத நிலை ஏற்பட்டுள்ளதுடன் சிறார்களின் ஆரம்பக்கல்வியறிவு பாதிப் படைந்துள்ளதென



முன்பள்ளிக் கொட்டகை

முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபையினருக்கு பல தடவைகள் தெரியப்படுத்தப்பட்டுள்ள பொழுதிலும் இவ்விடயம் தொடர்பாக இது வரை எவ்வித நடவடிக்கைகளையும் கரைச்சிப் பிரதேச சபையினர் மேற்கொள்ளவில்லையெனவும் இதன் காரணமாக இதுவரைகாலமும் மேற்படி முன்பள்ளியில் கல்வி பயின்று வந்த முன்பள்ளிச்சிறார்களின் ஆரம் பக்கல்விநிலை கேள்விக் குறியாக அமைந்துள்ளமை சகலரையும் கவலைக்குள்ளாக்கியுள்ளது. (சோ)

## கண்டெடுப்பு

(மல்லாவி)

மல்லாவி நகர் பகுதியில் துணுக்காய் காவல்துறை பணிமனையினரால் நடேசு விஜயராசா பொன்னகர் கிளிநொச்சி என்ப வருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் யாழ்சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் நேரில் வந்து பெற்றுக கொள்ளவும் (24)

## கால்நடைகளைக் கட்டி வளர்க்க உரிமையாளர்களுக்கு வேண்டுகோள்

(பூநகரி)

சகல கால்நடை உரிமையாளர்களும் தமது கால் நடைகளைக் கட்டி வளர்க்குமாறு முழங்காவில் கமக்கார அமைப்புத் தலைவர் சி.விநாயகமூர்த்தி கேட்டுள்ளார்.

இனிமேல் கால் நடைகள் கட்டத் தவறும் பட்சத்தில் கால் நடைகள் பிடிக்கப்பட்டு தண்டம் அறவிடப்படும் என அவர் கூறியுள்ளார். இதே போல் பள்ளிக்குடாப் பிரதேசத்தில் கட்டாக்காலிக் கால் நடைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றன. இக் கால்நடைகள் பாடசாலை, முன்பள்ளி, கடற்றொழில் சங்கம் என்பவற்றிற்கு முன்னால் சாணம் போட்டு அப்பகுதியை அசுத்தமடையச் செய்கின்றன. எனவே இக்கட்டாக் காலி கால் நடைகளைக் கட்டுப் படுத்துவதற்கு சகலரும் ஒத்துழைப்பு நல்குமாறும் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றார்.

## வெள்ளத்தால் பாதிப்பு


(மல்லாவி)

தொடர் மழையினால் மாந்தை கிழக்குப் பிரதேசத்தின் சிறாட்டிக்குளம் ,துணுக்காய் பிரதேசத்தில் கல்விளான் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

சிறாட்டிக்குளம் கிராமத்தில் பறங்கியாறு பெருக்கெடுத்து நீர் பாய்வதால் 40 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன மாந்தை கிழக்கு பிரதேச செயலரால் கடந்த வாரம் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இதே போன்று கல்விளான் பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நாற்பதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கல்விளான் பாடசாலையில் தஞ்சம் அடைந்தனர். இவர்களுக்கான உணவுப் பொருட்களையும் துணுக்காய் பிரதேச செயலரால் கடந்த வாரம் வழங்கப்பட்டது. (24)

# மரபுவழிப்படைக் கட்டமைப்பைப் பலப்படுத்தி இலக்கை அடையும் உறுதியுடன் உழைப்போம்

## -தமிழீழ கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை



(அலுவலகசெய்தியாளர்)

"மாவீரர்களின் தியாகத்தால் தான் நாம் இன்று ஒருமரபு வழி இராணுவமாக வளர்ந்திருக்கிறோம். இந்தக் கட்டமைப்பை நாம் தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டும். எனவே அனைவரும் ஒன்றுபட்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இலக்கை அடைவதற்கு உழைத்து தேசத்தின் புதல்வர்களின் கனவை நனவாக்க வேண்டும்" இவ்வாறு தமிழீழ கடற்படையின் சிறப்புத்தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலய திலீபன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மாவீரர்நாள் சிறப்பு நிகழ்வில் கலந்து சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழினத்தின் விடுதலைக்காக தம்மை ஈகம் செய்த மகத்தான தற்கொடையாளர்கள்தான் மாவீரர்கள். இவர்கள் தமிழ் மக்களாகிய எங்கள் அனைவரது இதயத்திலும் வைத்துப் பூஷிக்கப்பட வேண்டியவர்கள். பல வரலாற்று வெற்றிகளை சமர்க்களங்களில் சாதித்து தந்த காவிய நாயகர்கள். இவர்களின் தியாகத்தால் தான் எங்கள் விடுதலைப்போராட்டம் இன்று ஒரு பெரும்வீச்சாக வளர்ந்துநிற்கிறது.

சமாதானத்திற்கான கதவுகளைத் திறந்துவைத்தது உங்களின் பிள்ளைகள். யுத்தம் நிறுத்தப்பட்டு இரண்டரை ஆண்டுகள் சமாதானம் நிலவிக்கொண்டிருக்கிறது. ஆனாலும் மாவீரர் பட்டியல் கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததைப் போலவா இருக்கிறது இல்லை. மாவீரர்களின் பட்டியல் நீண்டுகொண்டுதான் போய்க் கொண்டிருக்கிறது இதற்கு என்ன காரணம் நாங்கள் திருப்பித் தாக்க முடியாது. ஆனால் அவர்கள் தாக்கலாம். இதுதான் இந்த ஒப்பந்தம். எங்களுடைய சமாதானப் பேச்சுக்களில் நோர்வே தான் தரகராக இருக்கிறது. ஆனால் எங்களைத் தடைசெய்துள்ள அமெரிக்காவும், பிரிட்டனும், இந்தியாவும் கருத்துச் சொல்கின்றனர். இவர்கள் தான் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் சொல்ல வேண்டுமா?

பலஸ்தீன இயக்கத்தின் தலைவர் யசீர் அரபாத் அவர்களின் தலைமையிலான விடுதலைப் போராட்டத்தை பலநாடுகளுமே அங்கீகரித்திருந்தன. சமாதானத்திற்கான நோபல் பரிசுகூட அரபாத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அரபாத் சாகும் தறுவாயில் கூட வீட்டுக்காவலில் தான் இஸ்ரேலால் வைக்கப்பட்டிருந்தார். இது யாவரும் அறிந்த உண்மை. ஆலோசனை வழங்கியவர்களும், தரகராக இருந்தவர்களும், நடுநிலையாகச் செயற்பட்டவர்களும் ஏன் முழு உலகமும் இதற்கு என்ன நியாயத்தை கூறப்போகிறது. இதுதான் இன்றைய உலகத்தலையீடுகள் போராட்டங்களுக்குக் கற்பிக்கி[illegible] நியாயங்கள் சமாதானத்திற்கே, நோபல் பரிசுபெற்ற அரபாத்திற்கு இந்த நிலைமை என்றால் நீங்கள் சிந்தித்துப் பாருங்கள் பலஸ்தீன விடுதலைப் போராட்டம் ஒருதளம் இல்லாமல் செயற்படுகிறது. எங்கள் போராட்டம் அப்படியல்ல.

வட-கிழக்கில் எழுபது வீதமான நிலப்பரப்பைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறோம். அதுமட்டுமன்றி, நாங்கள் ஒரு மரபுவழி இராணுவமாக உருப்பெற்றிருக்கிறோம். நாங்கள் மரபுவழி இராணுவமாக இருக்கின்றதால் தான் சரிசமமாக அரசு எங்களுடன் பேசுகின்றது.

போர்நிறுத்தம் ஏற்பட்ட காலம் முதல், இன்று வரை சந்திரிகாவினுடைய ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, ரணிலினுடைய எதிர்க் கட்சியானாலும் சரி இராணுவ சம நிலையை உயர்த்துவதில் தான் அவர்களின் சிந்தனை இருந்தது. இதனால்தான் பல நாட்டுக்கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கின்றன. இன்று நாங்கள் அனுபவிக்கின்ற உரிமைகள் எவையும் பேசிக்கிடைத்தவை அல்ல. உங்களினுடைய பிள்ளைகளின் பலத்தால் அடித்துப் பெறப்பட்டவைகள் தான். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டிருக்கிறது. இது உங்கள் பிள்ளைகளின் வீரத்தால் தான் நிகழ்ந்தது.

காஷ்மீர் பிரச்சினையை வைத்து இந்தியாவை எப்படித் திணறடிக்கிறார்களோ தலிபான், ஆப்கானிஸ்தான் விடயத்தில் பாகிஸ்தானை எப்படித் திணறடிக்க வைக்கிறார்களோ அதேபோல புலிகள் விவகாரத்தை வைத்து இந்தியாவையும் சிறிலங்காவையும் ஒரே தடவையில் குழப்பிக்கொண்டிருக்கிறார்கள் மேற்குலகம். மேற்குலகம் சிறிலங்காவில் கால்பதித்துவிடும் என அஞ்சிக்கொண்டிருக்கிறது. இந்தியா இத்தனைக்கும் மேலாக ஜே.வி.பி. கட்சி குட்டையைப் போட்டு குழப்பிக் கொண்டிருக்கிறது. இது தான் இன்று நடந்து கொண்டிருக்கிறது. இன்று அரசாங்கம் இதய சுத்தியுடன் சமாதானத்தை முன்னெடுத்து கொண்டிருக்கிறது என்றால் முன்னரங்க நிலைகளுக்கு ஒவ்வொரு நாட்டினுடைய இராணுவ கடற்படை அதிகாரிகள் எவரும் வரவேண்டிய தேவையில்லை. பொருளாதார ரீதியாக நாட்டைக் கட்டி எழுப்பக்கூடிய வல்லுனர்கள் தான் வரவேண்டும் அவர்கள் எவருமே இங்கு வரவில்லை. ஆரம்பத்தில் சதீஸ் நம்பியாரில் இருந்து இந்தியக் கடற்படைத்தளபதி அருண்பிரகாஷ் வரைக்கும் வந்து கொண்டிருப்பவர்கள் அனைவரும் இராணுவ வல்லுனர்கள் தான்.

இன்று பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு பின்னடித்துக் கொண்டிருப்பவர்கள் யார்? நாங்கள் இடைக்கால தன்னாட்சி வரைவின் அடிப்படையில் பேசுவோம் என்கிறோம். சந்திரிகாவின் கூட்டுக் கட்சியான ஜே.வி.பி. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறது. இதனால் தான் நாங்கள் சந்திரிகாவின் கூட்டுக்கட்சிகள் அனைத்தும் சேர்ந்து பேச்சுக்களின் ஊடாக இந்தப்பிரச்சினையை தீர்க்க தாங்கள் சம்மதம் என்று அறிக்கை ஒன்றை விடுமாறு கேட்டிருந்தோம். சந்திரிகா பேச ஜே.வி.பி. குழப்ப நிலைமை எங்கே? இதற்காகவா உங்கள் பிள்ளைகள் மாவீரர் ஆனார்கள்.

அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டை பிடிக்கிறார்கள் அவர்களது நிலைப்பாடு என்ன ஜே.வி.பி லண்டனில் சொல்கிறது சந்திரிகா புலிகளுடன் பேச நாங்கள் தடை இல்லை என்கிறது ஐக்கிய தேசியக் கட்சியும் இதைத்தான் சொல்கிறது. இதற்குப்பிறகு சந்திரிகா ஏன் பேச தயங்குகிறார். இவர்களின் நோக்கம் எல்லாம் அடுத்த சனாதிபதித் தேர்தலுக்கான காய்நகர்த்தல் தான். அவர்கள் எங்களின் பிரச்சினையைத் தீர்ப்பதாக இருந்தால் எப்போதே தீர்த்திருப்பார்கள். கருணா விடயத்தில் அவர்களுக்குச் சாதகமாக எதுவும் கிடைக்கவில்லை. நினைத்தது ஏதோநடந்தது ஏதோவாக மாறிவிட்டது இவர்கள் இடைக்கால நிர்வாகம் பற்றி அரசைக் குழப்பிக்கொண்டிருக்கிறார்கள். அண்மையில் பிரபல சட்டத்தரணியும் அரசியல் வாதியுமான எஸ்.எல்.குணசேகரா ஒரு கருத்தைக் கூறியிருந்தார். இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் கொடுத்தால் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி சூசை திருகோணமலைத் துறைமுகத்தில் இருந்து கொண்டிருப்பார். சிறிலங்காக் கடற்படைகளின் கப்பல்கள் பிராந்திய கடற்பரப்பில் பயணிப்பதாக இருந்தால் அவரின் அனுமதி பெற்றுத் தான் போகவேண்டும். இதற்காகத்தான் புலிகள் இடைக்கால நிர்வாகத்தை கோருகின்றனர் என்று எழுதியிருந்தார்.

உண்மையில் திருகோணமலைத்துறை முகம் யாருடையது திருகோணமலை எங்களுடைய சொந்த இடம் தமிழர்களினுடைய தாயக பூமி அதில் நாங்கள் இருப்பதில் ஒரு பிரச்சினையும் இல்லை. இதற்கு நாங்கள் இடைக்கால நிர்வாகத்தினூடகத்தான் போக வேண்டியதில்லை இது புலிகளை சீண்டுகிறவிடயம்.

இவர் ஒரு பத்து ஆண்டுகளை முன்னோக்கிப் பார்க்கவேண்டும் உண்மையில் திருகோணமலை துறை முகத்துக்குள் யுத்தகாலத்தில் கடற்கரும்புலிகளும் கடற்புலிகளும் இணைந்து டசின் கணக்கான கப்பல்களை தகர்த்திருக்கிறார்கள் யுத்தம் நிறுத்தப்படும் போது திருமலைதுறைமுகம் கேள்விக்குறியாக இருந்தது இந்த நிலையில் ஆய்வாளர்கள் சிலர் இடைக்கால நிர்வாகத்தை புலிகள் கேட்பது தனிநாட்டை அடைவதற்கான ஒருவழி என்று தவறான கருத்தை பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்திய- இலங்கை ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டு தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிப்பதற்கு அரசாங்கம் முனைந்து கொண்டிருக்கிறது. 1987இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டபோது நாம் சாரம் அணிந்த சிறுதொகைப் போராளிகள் இன்று 17800இற்கும் அதிகமான மாவீரர்களின் தியாகத்தால் ஒரு மரபு வழிப்படையாக நாம் வளர்ந்திருக்கிறோம். இழுத்தடிப்புக்களை செய்யுமாறு சிறிலங்கா அரசுக்கு யாரோ ஆலோசனை கூறியிருக்கிறார்கள் போலத் தெரிகிறது. எமது மரபு வழி இராணுவக்கட்டமைப்பு சிதைக்கப்படுமாக இருந்தால் 17800 மாவீரர்களின் தியாகமும் அதன்பால் கொல்லப்பட்ட 75 ஆயிரத்திற்கும் அதிகமான மக்களின் இழப்புக்களுக்கும் அர்த்தம் இல்லாமல் போய்விடும் எனவே தமிழ் பேசும் மக்களாகிய நீங்கள் அனைவரும் எமது மரபு வழிப் படைக் கட்டமைப்பைப் பலப்படுத்தும் வகையில் செயறபட்டு எமது விடுதலைப் போராட்டத்தின் இலக்கை அடைவதற்கு ஒன்றுதிரண்டு உழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் எனவும் தெரிவித்தார். (லோ,11)

# கடும் மழையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குக

## –யாழ். கமக்கார அமைப்புக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாகப் பெய்துவரும் கடும் மழை அதனால் ஏற்பட்ட வெள்ளம் என்பவற் றால் பாதிப்படைந்துள்ள யாழ். விவசாயிகளுக்கு நிவாரண உதவி கள், நஷ்டஈட்டு உதவிகள் என்பன வழங்கப்பட வேண்டும் என யாழ்.மாவட்ட கமக்கார அமைப்புக்கள் கோரியுள்ளன.

யாழ்.குடாநாட்டில் இவ்வாண்டு ஒப்பீட்டளவில் கணிசமான விளை நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் அண்மைக்காலமாகப் பெய்து வந்த கடும் மழை அதனால் ஏற்பட்ட வெள்ளம் என்பவற்றால் ஏராளமான விளைநிலங்களில் நடுகை பண்ணப்பட்டிருந்த பயிர்கள் அழிவடைந்துள்ளன.

இதனால் யாழ்.குடாநாட்டு விவசாயிகள் ஆயிரக்கணக்கானோர் பெருமளவு நஷ்டத்தை எதிர் கொண்டுள்ளனர்.

எனவே இவ்வாறு மழை, மற்றும் வெள்ளம் என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்கான நிவாரண உதவிகளை வழங்க முன்வருமாறு கோரப்பட்டுள்ளது. (33)

# கோதுமை மாவிற்குத் தட்டுப்பாடு நிலைமையைச் சீர்செய்யக் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கோதுமை மாவிற்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக கோதுமை மாவைப் பெற்றுக்கொள்வதில் நுகர்வோர் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

இதனையடுத்து வெதுப்பக உற்பத்திகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதனால் பாண், பணிஸ் போன்ற வெதுப்பக உற்பத்திகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை மக்களிடையே பெரும் தாக்கங்களை உருவாக்கியுள்ளன.

இதனால் சில இடங்களில் உள்ள கடைகளில் தரமற்ற கோதுமை மாவை விற்பனை செய்தும் வருவதாகப் பொதுமக்கள் தரப்பிலிருந்து குற்றம் சாட்டப்படுகிறது. எனவே கோதுமை மாவிற்கான தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் கோரியுள்ளனர். (33)

# அவுஸ்திரேலிய அமைச்சர் இன்று யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலியாவின் அரசாங்க அமைச்சர் ஒருவர் இன்று உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்.குடாநாட்டிற்கு வருகைதருகிறார்.

யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்கள், இடப்பெயர்வுகள் மற்றும் பாதுகாப்புக் கெடுபிடிகளால் மக்கள் எதிர் கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு யாழ்.வரும் இவர் அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

அத்துடன் இன்று நண்பகல் குடாநாட்டு ஊடகவியலாளர்களை யாழ்.அரசசெயலகத்தில் வைத்துச் சந்தித்து ஊடகவியலாளர் மாநாடு ஒன்றையும் நடத்துவார். (33)

## புனரமைக்கக்கோரல்

யாழ்.பலாலி வீதியில் உள்ள திருநெல்வேலி தபால்கட்டைச் சந்தியில் இருந்து பரமேஸ்வரா சந்தி வரையான வீதி மிக மோசமாகச் சேதமடைந்திருப்பதால் இவ்வீதியூடாகப் பயணிப்போர் பலத்த அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர். இதுகுறித்து இவ்வீதிப் பகுதியைப் பராமரிப்புச் செய்து வரும் நல்லூர் பிரதேச சபையினரிடம் முறையிட்டும் இதுவரை உரிய நட வடிக்கை எடுக்கப்படாமை குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# குடாநாட்டில் உலக வங்கி நிதியுதவியுடன் 14,480 வீடுகள் புனரமைக்க உத்தேசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின்போது சேதமாக்கப்பட்ட 14ஆயிரத்து 480 வீடுகள் உலக வங்கியின் நிதியுதவியில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் யாழ். குடாநாட்டில் உள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே பொதுமக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் உள்ள வீடுகள் உள்வாங்கப்படவுள்ளன.

அடுத்த ஆண்டு முற்பகுதியிலிருந்து நடைமுறைக்கு வரும் இவ்வீடுகள் புனரமைப்புத் திட்டம் 4கட்டங்களாக நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

அந்த வகையில் முதலாவது கட்டத்தில் 1448 வீடுகளும் இரண்டாம் கட்டத்தில் 3620 வீடுகளும், மூன்றாவது கட்டத்தில் 4706 வீடுகளும், நான்காவது கட்டத்தில் 4706 வீடுகளுமாக மொத்தம் 14480 வீடுகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் யாழ்.செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (33)

# மிதிவெடி அகற்றும் பணி தொடர் மழையால் நிறுத்தம்

யாழ்.குடாநாட்டில் பெய்துவரும் மழை காரணமாக மிதிவெடி மற்றும் வெடிபொருள் அகற்றும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மழை பெய்யும் காலங்களில் நிலம் ஈரமாக இருப்பதனாலும், வெள்ளத்தினால் வெடிபொருட்கள் அடித்துச் செல்லப்பட்டு இடமாற்றமடையக் கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுவதனாலுமே இச்செயற்பாடு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. (33)

# காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு பேச்சளவில்...

இந்தியாவும், பாகிஸ்தானும் தம்மிடையே தொலைவாகிப்போன சமாதானத்தை மீண்டும் எட்டிப்பிடிக்கும் முயற்சி போன்று பேச்சுவார்த்தை நடத்த முடிவு எடுத்துள்ளன. அந்த வகையில் இருநாட்டு வெளியுறவுச் செயலர்களும் எதிர்வரும் டிசெம்பர் மாதத் தொடக்கத்தில் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவும் முடிவு செய்துள்ளனர்.

ஆனால் இரு நாடுகளும் சமாதானத்தை எட்டுவது மிக இலகுவானதா... என்றால் அது மிகவும் சங்கடத்திற்குரிய வினாவாகவே காணப்படுகின்றது.

ஏனெனில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பதவியேற்றதும் முதலில் பேசிய விடயம் பாகிஸ்தானுடன் சமாதானமாகக் கை கோர்ப்பதில் தாம் சாதித்துக் காட்டுவோம் என்றுதான்.

ஏனெனில் வாஜ்பாய் அரசு சமாதானம் என்று வாய்வார்த்தையுடன் நின்றுவிட்டதாகவும், தமது அரசு செயல்முறையில் அதனை எட்டிவிடப் போவதாகவும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கூறியும் கொண்டது.

அத்துடன் இரு நாடுகளும் பேச்சுவார்த்தைகளை இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் மாறி மாறி நடத்தியும் கொண்டன. இரு நாடுகளிடையேயும் பொருளாதாரம் முதல் போக்குவரத்து வரை உடன்படிக்கைகள் செய்துகொள்ளவும் பட்டன. ஆனால், எதுவும் நடைமுறைக்குத்தான் வரவில்லை. எல்லாமே கானல் நீராக கலைந்தே போய்விட்டது. இருநாடுகளும் மீண்டும் அமைதியாக வாய்மூடிக் கொண்டும் விட்டன.

தற்போது மீண்டும் சமாதானம் குறித்து இரு நாடுகளும் உச்சரித்துள்ளன. அதுவும் பாகிஸ்தான் பிரதமர் சவுத் அஸிஸ் இந்தியா வந்து சென்றதையடுத்தே இந்த சமாதானப் பேச்சுக்குறித்து உச்சரிக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்க தொன்று.

அதேநேரம் இந்தியா வந்த பாகிஸ்தான் பிரதமர் சவுத்அஸிஸ், பிரதமர் மன்மோகன்சிங் முதல் பெற்றோலியத்துறை அமைச்சர் மணிசங்கர் ஐயர் வரை சந்தித்துத் தான் சென்றுள்ளார்.

இந்த சந்திப்பானது இரு நாட்டு சமாதானத்திற்கான மீண்டும் தொடக்கப் பேச்சுவார்த்தை என்று தான் பரவலாக நம்பப்படுகின்றது.


மன்மோகன்சிங்

ஏனெனில் பாகிஸ்தான் பிரதமரே இந்தியா வந்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாகவும், பாகிஸ்தானே சமாதானத்தில் மிகவும் ஆர்வம் காட்டுவதாகவுமே சித்தரிக்கப்படுகின்றன.

ஆனால் உண்மை வேறு ஒன்று இருக்கின்றது. பாகிஸ்தான் பிரதமர் சவுத் அஸிஸ் இந்தியா வந்தது இந்தியா-பாகிஸ்தானிடையே நிலவும் சிக்கல்களைப் பற்றி விவாதிப்பதற்கோ.... அல்லது இருநாட்டு சமாதானத்தில் மிகுந்த அக்கறை கொண்டோ அல்ல. அவரது வருகை, தெற்காசிய நாடுகளின் அமைப்பான சார்க் மாநாடு பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் சனவரியில் நடைபெறவுள்ளது. இதன் தலைவராக சவுத் அஸிஸ் இருப்பதனால், சார்க் மாநாட்டிற்கு இந்தியாவைக் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுப்பதற்காகவே அவர் இந்தியாவுக்கு இரண்டுநாள் விஜயம் மேற்கொண்டிருந்தாரே அன்றி, அவரது வருகை இந்தியா, பாகிஸ்தான் சமாதானத்திற்கான வருகை அல்ல என்பதே உண்மை நிலைப்பாடாகும்.

சார்க் மாநாட்டிற்கு அழைக்க வந்த பாகிஸ்தான் பிரதமர் வந்த இடத்தில் இந்தியாவுடன் சமாதானம் குறித்தும் கதைத்துவிட்டு தான் சென்றுள்ளாரே தவிர மற்றப்படி சமாதானத்தின் தூதுவராக அவரது வருகை அமைந்திருக்கவில்லை என்றுதான் கூற வேண்டும்.

அது மட்டுமன்றி சார்க் மாநாட்டின் அழைப்பிற்கு இந்தியாவிற்கு வருகை தந்த பாகிஸ்தான் பிரதமர் தானாகவே காஷ்மீர் விடயம் குறித்து பேசினாரா... என்பது சந்தேகமே.

ஏனெனில் பாகிஸ்தானைப் பொறுத்தவரை சனாதிபதி முஷாரப் தான் எல்லாவகை முடிவுகளையும் எடுக்கக் கூடியவர். தன்னை மீறிச் செயற்படுபவர்களை அவர் விட்டு வைப்பதில்லை. பதவியிலிருந்து தூக்கவும் பின்நிற்பதில்லை என்று தான் கூறப்படுகின்றது. இந்த வகையில்தான் முன்னாள் பிரதமர் ஜமாலியின் பதவி தூக்கப்பட்டதாக பரபரப்பாகப் பேசப்பட்ட காலமும் உண்டு.

அது மட்டுமன்றி தற்போதைய பிரதமர் சவுத் அஸிஸ், கூட முஷாரப்புடன் நெருங்கியவர் என்றும் கூறப்படுகையில் அவர் தானாக இந்திய-பாகிஸ்தான் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்க மாட்டார் என்றுதான் கூற வேண்டும்.

மறுபுறம் இந்தியா வந்த வேகத்தில் பிரதமர் எனும் பெருமையுடன் சமாதானம் குறித்துப் பேசியிருப்பின் அவரது பதவி முன்னாள் பிரதமர் ஜமாலி போன்றே துறக்கும் நிலைகூட ஏற்படக் கூடும்.

எது எப்படியோ பாகிஸ்தானே மீண்டும் காஷ்மீர் விடயம் குறித்தும் சமாதானம் குறித்தும் பேசியிருப்பதாக நம்பப்படுகையில், நாம் மட்டும் சும்மா இருக்க முடியுமா... என்பது போலவே இந்தியாவும் தனது சமாதானக் கதவுகள் திறக்கப்படுவதாகக் காட்டிக் கொள்ள முனைப்புக் காட்ட ஆரம்பித்திருப்பது என்னவோ உண்மை தான்!


முஷாரப்



ஆனால் இரு நாடுகளும் எவ்வளவு தான் வாய் வலிக்க சமாதானம், சமாதானம் என்று பேசிக்கொண்டாலும் கூட, காஷ்மீர் விடயம் குறித்து இரு நாடுகளும் பேசாதவரை எதுவுமே நடைமுறைக்கு சாத்தியமாகும் என்று நம்புவது இயலாத காரியம்.

அதுமட்டுமன்றி, தற்போது காஷ்மீரில் கூரியத் மாநாட்டுக்கட்சி இரு கூறாக பிளவுபட்டுப்போயுள்ளது. அத்துடன் அங்குபலவிதமான வேறுகட்சிகளும் இயங்கி வருகின்றன.

நேற்றுவரை பாகிஸ்தான் கூரியத் மாநாட்டுடன் நல்லுறவு பேணிவந்தது, ஆனால் இன்றோ கூரியத்மாநாட்டுக்கட்சி பிளவுபட்டதுடன் பாகிஸ்தானுடனும் முரண்படத் தொடங்கியுள்ளது.

அதற்கு நல்ல உதாரணம் தான் பாகிஸ்தான் பிரதமர் கூரியத் மாநாட்டுக் கட்சிகளை ஒன்றிணைக்க எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்திருப்பதாகும்.

எனவே இந்தியாவும் பாகிஸ்தானும் மட்டும் காஷ்மீர் விவகாரம் குறித்துப் பேசுவதாகக் கூறிக் கொள்ளத்தான் முடியுமே தவிர, நிஜத்தில் எதையும் செயற்படுத்துவது மிகவும் கடினமான அதே நேரம் முடியாத காரியமும் கூடத் தான்.

ஏனெனில் கூரியத் மாநாட்டுக் கட்சியோ தாமும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள வேண்டும் என்று அடம்பிடிக்க எப்போதோ ஆரம்பித்துவிட்ட நிலையில் தற்போது பிளவுபட்டு இருப்பதும் சாதகமான பலனை ஏற்படுத்திவிடுமா என்பது சந்தேகமே!

அதனால் தான் இருநாடுகளும் காஷ்மீர் பிரச்சினைக்கு விரிவான தீர்வு எட்டப்பட வேண்டும் என்று மட்டும் கூறிவிட்டு, ஏனைய விடயங்கள் குறித்து உடன்படிக்கை செய்து கொள்கின்றன.

இந்தவகையில்தான் எதிர்வரும் டிசம்பரில் தொடங்கவுள்ள பேச்சுவார்த்தைகளும் அமையப்போகின்றன எனலாம்.

ஏனெனில் இந்திய வெளியுறவுச் செயலர் சிவராஜ் பட்டேல் பாகிஸ்தானுடன் டிசம்பரில் பேச்சு நடத்தும்போது போக்குவரத்துடன் வங்கி நடவடிக்கையும் விரிவுபடுத்தப்பட உடன்படிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ளார்.

அதேபோல் பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பும் காஷ்மீரை 7பகுதிகளாகப் பிரிக்க வேண்டும் என்று திட்டம் கூறுகின்றாரே தவிர, காஷ்மீர் விடயத்தில் எந்தவித சமரசத்திற்கோ, விட்டுக்கொடுப்பிற்கோ முன்வருவதாகத் தெரியவில்லை.

அ.கலைவாணி

ஆக... மொத்தய இருநாடுகளும் சமாதானத்தை எட்டிவிடுவோம்... என்று தமக்குத் தாமே கூறி தம்மையே ஏமாற்றிக் கொள்வதாகத்தான் தெரிகின்றது.

மறுபுறம் சமாதானம் பற்றிப் பேசுவதெல்லாம் இருநாடுகளும் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்காகத்தானா... என்பதும் சந்தேகமே. அண்மையில் கூட இந்திய குறுந்தூர ஏவுகணைப் பரிசோதனையை மேற்கொண்டிருக்கின்றது. பாகிஸ்தானுக்கு இராணுவ உதவிகளைச் செய்வதற்கு அமெரிக்கா முன்வந்திருக்கின்றது.

எனவே சமாதானம் குறித்துப் பேசும் இருநாடுகளும் ஏன் இவ்வாறு செயற்படுகின்றன என்பது பலத்த சந்தேகமே! என்றாலும் டிசம்பரில் ஆரம்பமாகவுள்ள பேச்சுவார்த்தைகள் எவ்வளவு பலாபலனைத். தரும் என்பது மற்றொரு வினா.

இருந்த போதும், டிசம்பர் பேச்சுவார்த்தைகள் இருநாடுகளிடையேயும் சமாதானத்தை ஏற்படுத்தும்... என்று நம்புவோமாக!

---

## மேல்கொத்மலை நீர்மின் திட்டம் முன்னெடுப்பு
## ஐ.ம.சு.மு-இ.தொ.கா மீண்டும் முறுகல்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிற்கும் இடையில் மேல் கொத்மலை நீர்மின்சக்தித் திட்டத்தை ஆரம்பத்திட்டத்தின் அடிப்படையில் முன்னெடுப்பதற்கு அரசு முன்வருவதன் காரணமாக முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இத்திட்டம் மலையகக் கட்சிகளுடன் கலந்தாலோசித்த முறையிலேயே முன்னெடுக்கப்படும் என்ற அடிப்படையில் இரண்டு மாதங்களிற்கு முன்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் [illegible] ந்தனையற்ற ஆதரவை வழங்கியது. சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி, இத்திட்டம் ஆரம்பத் திட்டத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்படாவிட்டால் இதற்கான நிதியுதவி வழங்கப்படமாட்டாது என அறிவித்துள்ளது.

அரசாங்கம் இத்திட்டத்தை அமுலாக்குவதன் மூலம் நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்த முடியும் [illegible] தெரிவித்துள்ளது. முன்பு [illegible]ங்கைத் தொழிலாளர் காங்கிரசினதும் சூழலியலாளர்களினதும் இவ்வாரம்பத்[illegible]ட்டம் பல நீர்வீழ்ச்சிகளிற்கு அழிவை ஏற்படுத்துவதுடன் இப்பகுதிக் குடியிருப்பாளர்களையும், இடம்பெயரவைக்கும் என்ற எதிர்ப்புக்களைப் புறம்தள்ளி உடன் பட்டது.

ஆனால் மேற்படி ஜப்பான் வங்கியின் கூற்றின்படி ஆரம்பத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு அனுமதிக்காக மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கடந்த 19ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஒரு பிரேரணையை முன்வைத்தமையே இம்முறுகல் நிலைக்குக் காரணம் எனத் தெரியவருகிறது.

---

## மொரட்டுவ சமன் கொலையின் முக்கிய சூத்திரதாரி இனம்காணல்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் முன்னாள் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் கொலை தொடர்பில் முக்கிய சாட்சியான பாதாள உலக கோஷ்டியைச் சேர்ந்த மொரட்டுவ சமனைக் கொலை செய்த முக்கிய சூத்திரதாரி எனக் கருதப்படுபவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். மொரட்டுவசமன் கடந்த வருடம் வெசாக் தினத்தில் பாணந்துறை பகுதியில் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தார். மஹரகமப் பகுதியைச் சேர்ந்த அட்டஇந்திக்க என்று அழைக்கப்படும் இந்திக்க ரோஷான் பெரேரோ என்ற பாதாள உலக கோஷ்டித் தலைவரே இவ்வாறு மொரட்டுவ சமனின் கொலை தொடர்பில் அடையாளம் காணப்பட்டவராவார் என்று குற்றப்புலனாய்வுக் குற்றத் தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் ஜெயந்த விக்கிரம ரட்ண தெரிவித்தார்.

அட்ட இந்திக்கவை இன்னும் ஓரிரு தினங்களில் கைது செய்து விடுவோம் என விக்கிரமரட்ண தெரிவித்தார்.அட்ட இந்திக்க 5 கொலைகளுடன் நேரடியாக சம்பந்தப்பட்டவர் ஆவார். இந்த நபரின் சகாவான தொப்பி சமிந்த கடந்த செவ்வாய்க்கிழமை வெலிக்கடைப்பகுதியில் வைத்து சிறிலங்கா பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடந்த வாரத்தில்

## 18.11.2004-24.11.2004

**18**


பலூஜா அகதிப் பெண்

*ஈராக்கிய நகரான பலூஜாவில் கிளர்ச்சியை அடக்கி நகரை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாக அமெரிக்க இராணுவம் பிரகடனப் படுத்தியுள்ளது.

பிரிட்டனுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ள பிரான்ஸ் சனாதிபதி ஜக்கிராக் பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயருடன் சந்திப்பொன்றை நடத்தினார்.


சிராக்குடன் பிளேயர்

**19**

* பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத்தின் மருத்துவ அறிக்கையினை அரபாத் சிகிச்சை பெற்ற பரிஸ் பேசி இராணுவ வைத்தியசாலையில் வைத்து மனைவி சுஹா பெற்றார்.


விடுதலை மகிழ்வில்

* ஈராக் தீவிரவாதிகளினால் கடத்தப்பட்ட போலந்து நாட்டுப் பெண் திரேஸா போர் கஸ் கலீபா விடுதலை செய்யப்பட்டார்.

**20**

*.பாகிஸ்தானின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள முல்தான் நகரில் இருந்து 130 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஷீதாவாத்னி எனும் கிராமத்தில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 21 பேர் பலி; 41 பேர் காயம்.

**21**

*.

சீனாவின் மங்கோலியாப் பகுதியில் உள்ள பாவேட்டோ பகுதியிலிருந்து புறப்பட்டபாம் பரிடர் சி.ஆர்.ஜே.200 வகையைச் சேர்ந்த பயணிகள் விமானம் திடீர் என்று தீப்பிடித்து விபத்துக் குள்ளானதில் 53 பேர் உயிரிழந்தனர்.


விமானத்தின் சிதைவுகள்

*. பங்களாதேஷின் தலைநகரான டாக்காவிலுள்ள சந்தைப் பகுதியொன்றில் திடீர் என தீப்பிடித்துக் கொண்டதில் 50 பேர் பலியானதுடன் 10 தீயணைப் புப்படையினர் காயமடைந்தனர் 2000 கடைகள் தீக்கிரை.




டாக்கா சந்தைப்பகுதி

*. ஜேர்மனியத் தலைநகர் பேர்லினில் நடைபெற்ற ஜி-20 நாடுகளின் நிதிய மைச்சர்கள் பங்கு பற்றிய கூட்டம் நிறைவு பெற்றது.


ஜி.20 மாநாடு

*. உக்ரைன் நாட்டு சனாதிபதித் தேர்தல் இடம் பெற்றது. இதில் ரஷ்யாவில் ஆதரவு பெற்ற பிரதமர் யனுகோவிச்சும் லிபரல் கட்சியைச் சேர்ந்த யூஸ்சென்கோவும் வாக்களித்தனர்.


சுவிப்ட் பயணம்

*. விண்வெளியில் காணப்படும் காமா கதிர்களைப் பற்றி ஆராய்வதற்காக அமெரிக்க "சுவிப்ட்" என்ற செயற்கைக் கோளை புளோரிடாவில் உள்ள கெப் கெவைரல் ஏவுதளத்திலிருந்து ஏவியது.

இது அமெரிக்கா, இத்தாலி, பிரிட்டன் ஆகிய நாடுகளின் ஒருங்கிணைப்பில் தயாரிக்கப்பட்டது.

* கொலை வழக்குத் தொடர்பாகக் காஞ்சிமடச் சங்கராச்சாரியார் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரதிய ஜனதா மற்றும் இந்து அமைப்புக்கள் போராட்டம் நடத்தியபோது 15பேருந்துக்கள் சேதமாக்கப்பட்டன.



பா.ஜ.க எதிர்ப்புக் கூட்டம்

**22**

* மத்திய பிலிப்பைன்ஸில் கடும் மழையினால் வெப்ப வலயப் புயலினால் ஏற்பட்ட பாரிய அலையெழுச்சியினால் பலபடகுகள் மூழ்கடிக்கப்பட்டதால் 165 பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காணாமற் போயுள்ளனர்.


ஜர்தாரி

* பாகிஷ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் கணவர் ஜர்தாரி 8 ஆண்டுகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

*தென்கொரியாவின் குவோன்யூ நகரக்கல்லூரியில் தேசிய ரீதியிலான போட்டிப்பரீட்சையில் தோற்றிய 6 உயர்கலைக் கல்லூரியைச் சேர்ந்த 140 மாணவர்கள் கையடக்கத் தொலைபேசி மூலம் பரீட்சையில் மோசடி செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டனர்.

* காஞ்சி மடச் சங்கராச்சாரியார் ஜெயந்திரர் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து அய்யாம்பாளைய இந்து முன்னணியின் அமைப்பாளரான சண்முகம் என்பவர் விஷம்குடித்து தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

**23**

* ஆப்கானிஸ்தானில் அண்மையில் தீவிரவாதிகளினால் கடத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை ஊழியர்கள் மூவரான வட அயர்லாந்தைச் சேர்ந்த அன்னெட்டாபிலானிகள், கொசோவா நாட்டைச்சேர்ந்த ஷகிபே ஹபிபி மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டின் இராஜதந்திரி அஜெலிடோ நாயன் ஆகியோர் விடுதலைசெய்யப் பட்டனர்.


ஐ.நா. ஊழியர்கள்

* ஈராக்கில் சுனி முஸ்லிம்களின் தலைவரான ஷேக்கலாப் அல்-சுகீர் என்பவர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

**24**

* பிரெஞ்சு சனாதிபதி ஜர்குலிஸ் சிராக் லிபியாவிற்கு விஜயம் செய்து லிபிய சனாதிபதி கடாபியுடன் திரிபோலியிலுங்க பாப் அஸீஸியா மாளிகையில் சந்தித்துப்பேசினார்.


# தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகளில் சகல வழிகளிலும் உதவியோருக்கு நன்றி

## -கிளி.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை

(அலுவலக செய்தியாளர்)

மாவீரர் நாள் நிகழ்வினைச் சிறப்பிக்கும் வகையில் சகல வழிகளிலும் உதவிகளையும் ஒத்தாசைகளையும் நல்கிய அனைவருக்கும் கிளிநொச்சி மாவட்டதேசிய எழுச்சிப் பேரவை தங்களது நன்றியினையும் பாராட்டினையும் தெரிவித்துள்ளது.

எமது தாயக விடுதலைப் போராட்டத்திற்கு தம் உயிர்களை ஈந்த மகத்தான மாவீரர்களின் பெற்றோர்களை விளக்கேற்றுவதற்கு துயிலும்இல்லங்கள் கோறாம் போக்குவரத்து சேவை செய்து உதவி வழங்கிய தமிழீழ போக்குவரத்துக் கழகத்தினருக்கும் தனியார் சிற்றூர்தி சேவையினர் சங்கத்திற்கும் வாடகைக்கார் ஆட்டோ சங்கத்தினருக்கும் வடபிராந்திய பாரஊர்திகள் போக்குவரத்து சேவையினருக்கும் ஒழுங்கமைப்புகளின் முன்னிலையில் நின்ற பொறுப் பாளர்கள், போராளிகள், பல நிறுவனங்களின் அமைப்புக்கள், பணிப் பாளர்கள், பணியாளர்கள், பல வழிகளிலும் உதவிபுரிந்த அரச, அரச சார்பற்ற நிறுவனத்தினர், பணியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தொண்டர்கள் ,கிராமஅபிவிருத்திச்சங்கங்கள், பொது அமைப்பின் உறுப்பினர்கள், வர்த்தகசங்கங்கள், பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியினையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கிறோம் எனவெளியிட்ட செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சோ)


வன்னேரிக் குளம்- பண்டிவெட்டு வீதியில் அதிகஅளவு நீர் பாய்ந்து வருவதனால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டு வருவதனைப் படத்தில் காண்க. (படம்- ரூபன்)

# நாட்டில் பாரிய குற்றச் செயல்கள் பாதாள உலகக் குழுக்களால் உயர்வு

## -சிறிலங்கா பொலிஸ் தலைமையக அதிகாரி தகவல்

(கொழும்பு)

பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகளால் நாட்டில் சட்டவிரோத செயல்கள் கொலைச்சம்பவங்கள், குற்றச் செயல்கள், ஆகியவை அதிகரித்துவருகின்றன என சிறிலங்கா பொலிஸ் தலைமையக குற்றப் புலனாய்வு, குற்றத்தடுப்புப் பிரிவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயந்த விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

தற்போது விசேட பொலிசார் பாதாள உலகக் குழுக்களை மடக்கிப் பிடிப்பதற்கு 24மணி நேரமும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். பொலிசார் தற்போது பாதாள உலகக் குழுவினரின் முக்கிய தலைவர்கள் மீதே இலக்கு வைத்துள்ளனர். நாட்டில் 20இற்கும் அதிகமான பாதாள உலகக்குழுக்கள் இயங்கி வருகின்றன.

இவற்றில் தென்பகுதியில் இயங்கிவரும் வம்பட்டா கல்லிய என அழைக்கப்படும் குழுவே பிரபல்யமானது.

பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்தோரில் 75சதவீதமானோர் தற்போது விளக்கமறியலிலும், சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். பாதாள உலகக் குழுவினரை ஒழித்துக் கட்டுவதற்கான தனியான விசேட பொலிஸ் பிரிவு அமைக்கப் பட்டதும் தற்போதைய நடவடிக்கைகளை விட இறுக்கமான நடவடிக்கைகளே மேற்கொள்ளப் படும்என்றுகூறினார். இதேவேளை பிரபல பாதாளஉலகக் குழு உறுப்பினர் தொப்பிசமிந்தவின் சட்டைப்பையில் காணப்பட்ட வங்கிக்கணக்குப் புத்தகம் பொலிசாரால் மீட்கப்பட்டது. இதிலிருந்தே இவரது வைப்பில் பெருமளவு பணம் இருப்பதுதெரிய வந்துள்ளது.

இவர் 10இற்கும் மேற்பட்ட கொலைகளுடன் தொடர்புபட்டவர் என்பது பூர்வாங்க விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. இவர் மொரட்டுவவில் வசித்த வீட்டைச்சூழ இருந்த மக்கள் இவரது சாவுச்செய்தியை அறிந்ததும் பட்டாசுகள் கொழுத்தி பாற்சோறு, பரிமாறிக்கொண்டாடியுள்ளனர்.

# ரூ.4கோடி ஊழல் மோசடி வழக்கு ரத்வத்த விசாரணைக்கு அழைப்பு

(கொழும்பு)

ஊழல் மோசடி வழியில் 4கோடி ரூபாவைச் சம்பாதித்தார் என சுமத்தப்பட்டுள்ள குற்றம் தொடர்பாக விசாரணை ஒன்றுக்கு வருமாறு முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

ரத்வத்த இது தொடர்பாக நீதிமன்றில் வழக்குத் தொடரப்படுவதைத் தடுக்க வேண்டுமாயின் ஆணைக்குழு முன் எதிர்வரும் 2ஆம் திகதிக்கு முன்பு ஆஜராக வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

முன்னைய ஐ.தே.க. அரசின் சமுர்த்தி அமைச்சர் திசாநாயக்கவை விசாரித்ததன் பின்னர் நடைபெறும் அரசியல்வாதி ஒருவருக்கெதிரான விசாரணை இது என்பது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் கேந்திர நிலையங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் பாரிய நெருக்கடி

## -அரசியல்வாதிகளின் பாதுகாப்பும் கேள்விக்குறி

(கொழும்பு)

கொழும்பில் வதியும் பிரபலஅரசியல் வாதிகளுக்கும் அலுவலகங்களுக்கும், வர்த்தக மையங்களுக்கும் போதிய பாதுகாப்பு வழங்குவதில் பிரச்சினை தோன்றியிருப்பதாக சிறிலங்கா பொலிஸ் திணைக்கள அதிகாரி ஒருவர் லக்பிமசிங்கள வார இதழுக்கு தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக அரசியல் வாதிகள் பெரும் அச்சுறுத்தலின் மத்தியில் காலம் கடத்துவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பு நகரில் தற்போது மூவாயிரம் பேரடங்கிய பொலிஸ் படையினரே உள்ளனர் என்று விபரித்த அவர், அவர்கள் பிரிக்கப்பட்ட மூன்று பிரிவுகளில் பணியாற்றுவதாகவும் அதன்படி கொழும்பு வடக்கு, தெற்கு, மத்தி என்று பிரிக்கப்பட்டு 19 நிலையங்களில் அவர்கள் கடமையாற்றுகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தெற்கில் பல முக்கிய அரச கட்டடங்களும் வெளிநாட்டு தூதரகம், நீதிபதி களின் வாசஸ்தலம் எனப்பல அமைந்துள்ளன. இப்பிரதேசத் திலேயே உயர்நீதிமன்ற நீதிபதி அம்பே பிட்டிய கடந்த வாரம் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தப் பாதுகாப்பு வழங்கும் பிரச்சினை தோன்றக்காரணம் ஊழியர் பற்றாக்குறை என்றும் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

# றொட்டிக்குள் கஞ்சா

அனுராதபுரம் சிறைச்சாலையில் கைதியாக இருக்கும் மருமகனைப் பார்க்கச்சென்ற மாமனார்.காலை உணவாகக்கொண்டு சென்ற கோதுமை றொட்டிக்குள் கஞ்சா வைத்திருந்ததை சிறைச்சாலைப் பொலிசார் கண்டுபிடித்தனர்.

# ஊவா மாகாணசபை வரவு-செலவுத்திட்டம்

ஊவா மாகாணசபையின் 2005ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட அறிக்கை சமர்ப்பித்தலும், அது தொடர்பான விவாதங்களும், வாக்கெடுப்பும் எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதிமுதல் 8ஆம்திகதி வரை மாகாணசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி 2005ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையை மாகாண முதலமைச்சர் காமினி விஜித்த விஜயமுனிகொய்சா சபையில் சமர்ப்பிப்பார். அதைத்தொடர்ந்து மாகாண சுகாதாரம், சமூக சேவை, சிறுவர் நன்நடத்தை, அமைச்சுக்கள் தொடர்பான விவாதங்கள் இடம்பெறும்.

இரண்டாம் திகதி காணிவிவசாயம் நீர்ப்பாசன,கால்நடைஅபிவிருத்தி அமைச்சுக்கள் தொடர்பான விவாதங்கள் இடம்பெறும். ஆறாம் திகதி நெடுஞ்சாலை, மின்சக்தி கூட்டுறவுஅமைச்சுக்கள் தொடர்பான விவாதங்கள் இடம்பெறும். ஏழாம் திகதி விளையாட்டுத்துறை இளைஞர் விவகாரம், மகளிர் அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில், கிராம அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சுக்கள் தொடர்பான விவாதங்கள் இடம்பெறும். 8ஆம்திகதி நிதி, நீதிச் சட்டவாக்கம்,உள்ளூராட்சிக் கல்வி, போக்குவரத்துத்துறை, கலாச்சாரம் இந்து கலாச்சாரம், சுற்றுலா, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்களின் விவாதங்கள் இடம்பெறும். அன்று இரவு 8.45 மணியளவில் வரவு செலவுத்திட்டத்திற்கான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.


# மரணதண்டனை நிறைவேற்றும் அலுகோசுகளுக்கு தொடர்ந்து கொலைப் பயமுறுத்தல்

## - சனாதிபதியும் ஒப்புதலளிக்கத் தயக்கம்

(கொழும்பு)

மரணதண்டனையை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவர சிறிலங்கா அரசாங்கம் முடிவு செய்துள்ளதையடுத்து மரண தண்டனையை நிறைவேற்றும் அலுகோசுகளுக்கு பல்வேறு கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

கடந்த சில தினங்களாக தொலைபேசிகள் வழியாகவும் வேறு மார்க்கங்களிலும் அவர்களுக்கு இக்கொலைப்பயமுறுத்தல் கிடைக்கப்பெற்றுள்ளது.



பாதுகாப்பு கருதிதன்னை அடையாளங்காட்டாத முறையில் காணப்படும் மரண தண்டனை நிறைவேற்றும் அலுகோசுடன் சிறைச்சாலை அதிகாரி தூக்குமேடைப் பரிசோதனையில்.

இதன் காரணமாக தமதும் குடும்பத்தினரதும் பாதுகாப்புக்கு உறுதியளிக்குமாறு அலுகோசு ஊழியர்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக சிங்களவார இதழுக்கு செவ்வி அளித்த சிறைச்சாலை ஆணையாளர்ரூம்மர்சூக் இவர்களுக்கான பாதுகாப்பை அளிக்கும் உரிமை தமக்கு கிடையாது என்றும் சிறைச்சாலையுடன் அலுகோசுகள் தொடர்பற்றவர்களாகவும் நீதிச் சேவைஆணைக்குழு சனாதிபதி சந்திரிகா ஆகியோரே இதனுடன் தொடர்புபட்டுள்ளவர்களாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் மரண தண்டனைநிறைவேற்றுதல் தொடர்பான வர்த்தமாணி அறிவித்தல் வெளியிட சனாதிபதி சந்திரிகா இதுவரை ஒப்புதல் கையொப்பம் இடவில்லை என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

# உந்துருளி திருடிச் சென்ற இராணுவச் சிப்பாய் கைது

(கொழும்பு)

அமெரிக்க வாசியான பொறியியலாளர் ஒருவரின் சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான உந்துருளியை திருடிச் சென்ற குற்றச்சாட்டில் கண்டிப் பொலிசார் ஒரு சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

இச்சந்தேக நபர் இராணுவத்தில் கடமையாற்றியவர் எனப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பேராதனையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த சிறுவர் வைத்தியசாலை நிர்மாணவேலைகளின் பிரதான பொறியியலாளரான அமெரிக்கவாசி ஒருவரின் உந்துருளி அணிவத்தையிலுள்ள அவரது வீட்டில் வைத்துச் சில மாதங்களுக்கு முன்னர் திருடிச் செல்லப்பட்டது.

இவ்வாறு திருடப்பட்ட உந்துருளி பகுதி பகுதிகளாகக் கழற்றப்பட்டு வைக்கப்பட்டிருந்த போதே பொலிசார் அவற்றைக் கண்டுபிடித்துக் கைப்பற்றியுள்ளனர்.


## தொழிற் பயிற்சிநெறி-விண்ணப்பங்கோரல்

யு.என்.எச்.சி.ஆர் (UNHCH) நிறுவனத்தின் நிதியுதவியுடன் மற்றும் யப்பானிய அரசாங்கம் வழங்கும் நிதியுதவியுடன் உலக உணவுத்திட்டம் வழங்கும் உணவுப்பொருட்களின் உதவியுடனும் யப்பானிய உறவுப்பால நிறுவனமும் (BAJ) கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும் (REERDO) இணைந்து 155 ஆம் மைல்கல் ஏ-9 வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள நிறுவனத்தின் தொழிற்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சி நெறிகள்:-**

1) உழவு இயந்திரத்திருத்தம் (இருபாலாரும்)
2) தையல் (பெண்கள்)

**பயிற்சி நெறிக்கான காலம் : 06 மாதங்கள்**

**தகைமைகள் :-**

- 17-29 வயதிற்குட்பட்டவராயிருத்தல் வேண்டும்.
- ஆண்டு 10 வரை கல்விகற்றவராயிருத்தல் வேண்டும்.
- நலிவுற்ற குடும்ப அங்கத்தவராயிருத்தல் வேண்டும்.

**பயிற்சியின் அனுகூலங்கள்:-**

- தொழில்சார் பயிற்சிச்சான்றிதழ்
- சுயதொழில் முயற்சிக்கான தகுதி

**ஊக்குவிப்பு**

பயிற்சிக்காலத்தில் உலக உணவுத்திட்டத்தின் மூலம் உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:- 15-12-2004**

குறிப்பு:- பயிற்சிக்கான விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக்கப்பட்டு சுயவிபரங்கள் சரிவர நிரப்பப்பட்டு தபாலிலோ அல்லது நேரிலோ கீழ்க்குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

தொழிற்பயிற்சி நிலையம்,
155 மைல்கல் ஏ-9 வீதி,
தொண்டமான்நகர்,
கிளிநொச்சி.

(சி.10641)

பணிப்பாளர்



## அகில இலங்கை சமாதான நீதவான்



தம்பாபிர்ரா ஸ்ரீ பாலேஸ்வரன்

நல் மாணவனாய் மாணவர் தலைவனாய்
விளையாட்டு வீரனாய் விளையாட்டுக் கழக-
தலைவனாய்
சிவனாலய அறங்காவலர் சபை தலைவராய் அதன்
போசகராய் புனருத்தாரண சபை தலைவராய்

கூட்டுறவில் ஏற்பட்ட நம்பிக்கையினால்
புதுக்குடியிருப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில்
பணிப்பாளர் சபைத் தலைவனாய் "என்பணி
சமூகப்பணி " என்ற உன் சிந்தனைக்கு - கிடைத்த
மகுடமது "அகில இலங்கை சமாதான நீதவான்"

*மென்மேலும் பல பட்டங்கள் பெற்று*
*சிறப்புடன் வாழ வாழ்த்துவது.*

நண்பர்கள்
புதுக்குடியிருப்பு

(சி-10831)

# இந்தியாவின் சொந்தத் தயாரிப்பில்
# 3000 கோடி இந்திய ரூபா செலவில் புதியபோர்க்கப்பல்


**இந்தியக் கடற்படைக்கு 3,000 கோடி இந்தியா ரூபா செலவில் புதிய விமானம் தாங்கி போர்க்கப்பல் கட்டப்படுகிறது. இந்தியாவிலேயே தயாராகும் இந்தப் போர்க்கப்பலில் 25 போர் விமானங்களை நிறுத்தலாம்.**

கோவா மாநில பானாஜியில் உள்ள கடற்படை அகாடமியில் வீரர்களின் அணிவகுப்பு மரியாதையைப் பார்வையிட்ட கடற்படைத் தளபதி அட்மிரல் அருண் பிரசாத் அங்கு கருத்து வெளியிடுகையில்.

இந்தியக் கடற்படைக்கு ரஷியாவில் இருந்து "கோர்ஸ்கோவ்" என்ற விமானம் தாங்கி போர்க் கப்பல் வாங்கப்பட்டு உள்ளது. இது தவிர புதிதாக இந்தியாவிலேயே ஒரு விமானம் தாங்கி போர்க் கப்பல் கட்டப்படுகிறது. 40 ஆயிரம் தொன் எடையில் உருவாகும் இந்தப்போர்க்கப்பல் கொச்சித்துறைமுகத்தில் கட்டப்பட்டு வருகிறது.

ரூ. 3000 கோடி செலவில் கட்டப்படும் இந்தக் கப்பலில் 25 முதல் 50 போர் விமானங்களை நிறுத்தலாம். மேலும் இதில் 1200 முதல் 1500 வீரர்களும் இருப்பார்கள். இன்னும் 7ஆண்டுகளில் இந்தப் போர்க்கப்பல் தயாராகிவிடும் என்றார்.

## 20 ஆண்டுகளிற்கு பின் தாஜ்மகாலை
## நிலவொளியில் கண்டனர் உல்லாசப் பயணிகள்


தாஜ்மகால்

கடந்த 20ஆண்டுகளுக்குப் பிறகு நேற்று முன்தினம் இரவு முதன் முதலாக பௌர்ணமி நிலா வெளிச்சத்தில் தாஜ்மகாலை சுற்றுலாப் பயணிகள் கண்டு ரசித்தனர். உச்ச நீதிமன்றம் உத்தரவையொட்டி, பௌர்ணமிக்கு 2நாள் முன்பும், பௌர்ணமிக்கு 2நாள் பின்பும் தாஜ்மகாலைப் பார்க்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி நேற்று தாஜ்மகால் நுழைவாயில் திறக்கப்பட்டது. நிலா ஒளியில் தகதகக்க தாஜ்மகாலின் அழகைப் பயணிகள் கண்டுகளிக்கலாம் என்றிருந்தனர். ஆனால் பனிமூட்டம் இருந்ததால் பயணிகள் எதிர்பார்த்தபடி தாஜ்மகால் தகதகக்கவில்லை.

# ஆகாஷ் ஏவுகணை பரிசோதிக்கப்பட்டது
# இந்தியாவின் தொழில்நுட்பத்துறையின் சாதனை

(ஒரிசா)

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட ஆகாஷ் ஏவுகணை வெள்ளிக்கிழமை பரிசோதனை செய்து பார்க்கப்பட்டது.

வானில் உள்ள இலக்குகளைத் தாக்கவல்ல ஆகாஷ் ஏவுகணை. ஒரிஸா மாநிலம் சந்திப்பூரில் பிற்பகல் 12.30 மணியளவில் பரிசோதனை செய்து பார்க்கப் பட்டதாக இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்தது.

மிக நவீனமான ஆகாஷ் ஏவுகணை பல இலக்குகளைத் தாக்கக் கூடியது. முன்னதாக 12.10 மணியளவில் பைலட் இல்லாத லக்ஷயா விமானம் பறக்கவிடப்பட்டது. அந்த விமானத்துடன் இலக்கு இணைக்கப்பட்டு ஏவுகணையை ஏவி பரிசோதிக்கப்பட்டது.

27 கி.மீ.தூரம் சென்று தாக்க வல்லது இந்த ஏவுகணை. 700 கிலோ எடையுள்ள ஆகாஷ் ஏவுகணை 60 கிலோ எடையுள்ள ஆயுதங்களைத் தாங்கிச் செல்ல வல்லது.

இந்த ஏவுகணை ராஜேந்திரா என்ற கண்காணிப்பு ரேடார் உதவியுடன் செயற்படுகிறது. மின்னணு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு இந்த ரேடாரை வடிவமைத்துள்ளது. ஒரே சமயத்தில் 12 ஏவுகணைகளுக்கு வழிகாட்டக் கூடியது இந்த ரேடார்.

இந்தியாவின் ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஆகாஷ் உருவாக்கப்பட்டுள்ளது. ஏராளமான முறை பரிசோதனை செய்து பார்க்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணையின் வேகத்தை அதிகரித்தல், அதிக உயரம் செல்வதற்கு ஏற்றவாறு செய்தல், 60 கி.மீ தூரம் வரை தாக்குதல் நடத்துமளவுக்கு மேம்படுத்துதல் ஆகியன குறித்து தற்போதைய சோதனை நடத்தப்பட்டது.

விரைவில் ஆகாஷ் ஏவுகணை மேலும் 6முறை பரிசோதிக்கப்படவுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிருஸ்ணா நதி நீர் தமிழகம் சென்றது


தமிழகம் வந்துள்ள கிருஸ்ணா நதி நீர்

நீண்டநாட்களாக ஆந்திரா தமிழக மாநிலங்களிற்கு இடையே இழுபறிப்பட்டு வந்த கிருஸ்ணா நதி நீர்ப்பிரச்சினையின் பின் ஆந்திராவில் இருந்து தமிழகத்திற்கு திறந்து விடப்பட்ட நதிநீர் கடந்த சனி மாலை 6 மணியளவில் கண்டலேறு-பூண்டி கால்வாயில் தமிழக எல்லையின் தொடக்க மான ஊத்துக்கோட்டை ஜீரோ இடத்தை தண்ணீர் வந்தடைந்தது கண்டலேறில் இருந்து புறப்பட்ட கிருஸ்ணா நீர் தமிழக எல்லையை (152 கிலோமீற்றர் தூரத்தை) 5 நாட்களில் தொட்டது குறிப்பிடத்தக்கது.

தமிழக எல்லையை அடைந்த போது வினாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. தற்போது கண்டலேறில் திறந்து விடப்படும் ஆயிரம் கன அடி தண்ணீர் எந்தவித சேதாரமும் இன்றி தமிழகத்துக்கு வேகமாக வருகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ரஷ்ய அதிபர் விளாடிமீர் புட்டின் இந்தியா பயணம்
# இருநாட்டு இராணுவ ஒத்துழைப்புக்குறித்து ஆராய்வர்


புட்டின்

(புதுடில்லி)

ரஷ்யஅதிபர் விளாடிமீர் புட்டின் 3நாள் பயணமாக வருகின்ற டிசம்பர் 3ஆம் திகதி இந்தியா செல்கிறார். புட்டின் வருகையை வெளிவிவகாரத்துறை அமைச்சக அதிகாரி நேற்று முன்தினம் டில்லியில் அதிகார பூர்வமாக அறிவித்தார்.புட்டின் வருகையின் போது இந்தியா, ரஷ்யா இடையே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இராணுவம் மற்றும் பல துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்கப் பல ஒப்பந்தங்களை செய்து கொள்ளலாம் என்று தெரிகிறது.

புட்டின் வருகைக்கு முன்னதாக ரஷ்யஇராணுவ அமைச்சர் செர்ஜெய்ஜவனோவ் புதுடில்லி செல்கிறார். அவர் இந்தியாவுடன் இராணுவம் மற்றும் தொழில்நுட்பத்தில் இருநாடுகளும் ஒத்துழைப்பது பற்றி பேச்சுவார்த்தை நடத்துவார்.

ஜவனோவ் வருகின்ற 30ஆம் திகதி இந்தியா வருகிறார். அவர் புட்டின் வரும்வரை டில்லியில் தங்கியிருப்பார். புட்டின் வருகையின் போது பிரமாஸ் ஏவுக ணையின் தொழில் நுட்பம் 3ஆவது நாட்டுக்குப் போய் விடாதபடி பாதுகாக்க இருநாடுகளும் ஒப்பந்தம் செய்துகொள்ள உள்ளன. பிரமாஸ் ஏவுகணையை தரை,கடல், வானம் ஆகிய பகுதிகளிலிருந்தும் ஏவ முடியும். இராணுவ விமான தொழில்நுட்ப மேம்பாடு குறித்தும் ஒப்பந்தத்தில் இடம் பெறும் என்று தெரிகிறது.

# ஜெயேந்திரர் கைது விடயத்தினை பாரதீய ஜனதா திசைதிருப்புகிறது
## பா.ம.க.நிறுவுனர் ராமதாஸ் கண்டனம்

(சென்னை)

ஜெயேநதிரர் கைது நடவடிக்கை இந்து மதத்தின் மீதான தாக்குதல் என்று கூறுவது பா.ஜ.கவின் திசை திருப்பும் செயல் என்று கண்டனம் தெரிவித்துள்ளார் பா.ம.க நிறுவுனர் டாக்டர் எஸ்.ராமதாஸ்.

மத நம்பிக்கை உடையவர்கள், ஜெயேந்திரரை தங்கள் நம்பிக்கையின் பிரதிநிதியாகக் கருதுகின்றனர். குடியரசுத் தலைவர், பிரதமர், முதல்வர்கள், ஆளுநர்கள், உயர் அதிகாரிகள் உட்பட பல்வேறு தரப்பினரும் அவரைச் சந்திப்பது வழக்கம்.

அப்படிப்பட்ட ஒருவரை கொலை மற்றும் கொலை முயற்சி வழக்குகளில் கைது செய்வது சாதாரண விஷயம் அல்ல. மிகுந்த எச்சரிக்கையுடன் தகுந்த ஆதாரங்களுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை, சட்டத்தின் முன், சட்ட நடவடிக்கைகளுக்கு முன்பு அனைவரும் சமம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பொலிசார் எடுத்துள்ள இந்த நடவடிக்கையை வரவேற்றேன்.

வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. தீர்ப்புக் கூற வேண்டியது நீதிமன்றம் இதற்கிடையில் அவர் நிரபராதி என்று சொல்வது ஏற்கத்தக்கதல்ல. இப்படிச் சொல்பவர்கள் யார்? மக்களவைத்தேர்தலுக்குப் பிறகு ஏதாவது ஒருபிரச்சினையைப் பிடித்து கரையேறத் துடிக்கும் பா.ஜ.கவும் அதன் கிளை அமைப்புகளான இந்துத்துவா அமைப்புகளும்தான். ஜெயேந்திரர் கைது விவகாரத்தில் மத உணர்வைத் தூண்டி அரசியல் ஆதாயம் தேடத் துடிக்கிறார்கள். ஜெயேந்திரர் கைது இந்து மதத்தின் மீதான தாக்குதல் என்று பா.ஜ.க தலைவர்கள் சொல்வது அந்த நோக்கத்தில்தான் என்றும் அவர் தெரிவித்தார்.


லாவோஸ் நாட்டிற்குச் சென்றுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங்கிற்கு வியன்ட்டியானில் உள்ள தொழில் முனைவோர் அமைப்பினைச் சேர்ந்த குழந்தைகள் வரவேற்பு அளித்தனர்.

# நண்பர்களைச் சுட்டுக்கொன்ற பொலிசார் சுட்டுக் கொல்லப்பட்டார்

ஸ்ரீநகருக்கு வடக்கே பார்மில் மாவட்டத்திலுள்ள மத்திய பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் வீரர் ஒருவருக்கும் அவரது நண்பர்களுக்குமிடையில் ஏற்பட்ட வாக்கு வாதத்தைத் தொடர்ந்து குறிப்பிட்ட பொலிஸ்வீரர் ஏழு நண்பர்களான பொலிஸ் வீரர்களை சுட்டுக் கொலை செய்துள்ளார்.

இறுதியில் அவரும் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் மேலும் மூன்று பேர் காயமடைந்துள்ளனர் இது தொடர்பாக வைத்தியர்கள் தகவல் தருகையில் தீவிரமான அழுத்தம் காரணமாக உளவியல் ரீதியான பிரச்சினைகளை காஷ்மீர் மாநிலத்தில் சேவையாற்றும் பாதுகாப்புப்படைவீரர்கள் எதிர்நோக்கியுள்ளனர் என்றும் வைத்தியர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## ஒரே நேரத்தில் பல கல்லூரிகளில் வேலைபார்த்த பத்து தமிழக மருத்துவர்கள் பணிநீக்கம்

(சென்னை)

இந்திய மருத்துவ கவுன்சிலைச் சேர்ந்த குழுவினர் தமிழ் நாட்டில் உள்ள சில மருத்துவ கல்லூரிகளில் திடீர் சோதனை நடத்தினார்கள். இந்த சோதனையின் போது மருத்துவ கல்லூரிகளில் ஆசிரியர்களாக பணியாற்றுவதில் சில முறைகேடுகள் நடந்ததாகத் தெரிய வந்துள்ளது.


இதைத் தொடர்ந்து இந்திய மருத்துவ கவுன்சில் 10 மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளது. மதுரை மருத்துவ கல்லூரி முன்னாள் முதல்வர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த 10 மருத்துவர்களுக்கும் இந்திய மருத்துவ கவுன்சில் தடை விதித்துள்ளது.

இது தொடர்பாக மருத்துவ கல்லூரி இயக்குனருக்கு இந்திய மருத்துவ கவுன்சில் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. ஒரு மருத்துவ கல்லூரியில் மருத்துவ கவுன்சில் ஆய்வு நடத்திய போது அந்த மருத்துவ கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்கள் பெயர்கள் இன்னொரு மருத்துவ கல்லூரியிலும் இடம் பெற்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதாக சுற்றறிக்கையில் புகார் கூறப்பட்டுள்ளது. இதனையடுத்தே மேற்படி 10 மருத்து வர்களும் பணிநீக்கம் செய்யப் பட்டுள்ளனர்.

## இந்.-பாக் அமைதிமுயற்சி நம்பிக்கை தருகிறது

இந்தியாவும், பாகிஸ்தானும் மேற்கொண்டுள்ள அமைதி முயற்சி நம்பிக்கை ஊட்டுவதாக இருப்பதாக சீன பத்திரிகைகள் கருத்து தெரிவித்துள்ளன.

சண்டை, மோதல், அச்சுறுத்தல், போக்கை விட நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது. என்பதை இந்தியாவும், பாகிஸ்தானும் புரிந்து கொண்டுள்ளன. இது உறவு மேம்பட உதவும் என்று சீன டெய்லி தனது தலையங்கத்தில் எழுதியுள்ளது.பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஸீஸ் இந்தியாவுக்குச் சென்றதையும் அது வரவேற்றுள்ளது.




அவுஸ்திரேலிய அடிலேட் மைதானத்தில் அவுஸ்திரேலிய, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் போட்டியின் போது பந்து பட்டுக்காயமடைந்த கடல் நாரை ஒன்றை மைதானத்தில் இருந்து பாதுகாப்பாக அகற்றும் நியூசிலாந்து அணித் தலைவர் பிளெமிங்.

## அடிலேட் டெஸ்ட் போட்டி

# 251 ஓட்டங்களுடன் சுருண்டது நியூசிலாந்து

# அவுஸ்திரேலியாவுக்கு மீண்டும் வெற்றி வாய்ப்பு





அடிலேடில் நடைபெறும் நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியின் 3ஆம் நாளான நேற்று ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலியா தனது 2ஆவது இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 57 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக அவுஸ்திரேலியாவின் 575 ஓட்டங்கள் என்ற முதல் இன்னிங்சிற்குப் பதிலளித்து ஆடிய நியூசிலாந்து தனது முதல் இன்னிங்சில் 251 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் கிலெஸ்பி 3 விக்கெட்டுக்களையும், மெக்ராத் 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். உலக சாதனையாளர் ஷேன்வோர்ன் 550ஆவது விக்கெட்டைக்கைப்பற்றினார். முதல் டெஸ்ட்டில் சதமடித்த ஜேக்கப் ஓரம் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பிளெமிங் 83 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சதம் பெறும் வாய்ப்பைத் தவறவிட்டார். ஸ்டைரிஸ், விக்டோரி ஆகியோர் முறையே 28, 29 என்ற ஓட்ட எண்ணிக்கையுடன் ஆட்டமிழந்தனர். நியூசிலாந்து 251 ஓட்டங்களை மட்டும் பெற்றதால் தொடர்ந்தும் 2ஆவது இன்னிங்சை ஆட நிர்ப்பந்திக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அவுஸ்திரேலியா தனது 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்தது.



அவுஸ்திரேலிய அணி சார்பாக ஹெய்டன் 21, லாங்கர் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர். இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

# நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் முரளிதரன் பங்கேற்பார்



இலங்கை அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் தோள் பட்டையில் ஏற்பட்ட காயத்திற்காக கடந்த ஆகஸ்ட் மாதம் சிகிச்சை செய்து கொண்டார். அவுஸ்திரேலிய வைத்தியர் யங் அவருக்கு சத்திர சிகிச்சை செய்தார். இதனால் கடந்த 3 மாதங்களாக எந்தப் போட்டியிலும் முரளிதரன் விளையாடவில்லை.

இதற்கிடையே முரளிதரன் முழு உடல் தகுதியுடன் இருப்பதாகவும், அடுத்த வாரத்தில் இருந்து பந்து வீசத் தொடங்குவார் என்றும் அவரது மனேஜர் தெரிவித்தார். நியூசிலாந்துக்கு எதிராக அடுத்த மாதம் தொடங்கும் தொடரில் முரளிதரன் பங்குபற்றவுள்ளார்.

விளையாட்டு

## கொல்கத்தா டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

# ஜாக்கலிசின் சதம் தென்னாபிரிக்காவுக்கு நிம்மதி





இந்தியச் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இந்திய அணிக்கும் இடையில் கொல்கத்தாவில் நேற்று ஆரம்பமான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடும் தென்னாபிரிக்கா 5 விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தார். இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடும் தென்னாபிரிக்கா ஆரம்பத்தில் நெருக்கடியைச் சந்தித்தபோதும் ஜாக்கலிஸின் நிதானமான துடுப்பாட்டத்தின் மூலம் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தது.

துடுப்பாட்டத்தில் ஜாக்கலிஸ் ஆட்டமிழக்காது 103 ஓட்டங்களையும் பிரௌன் 15 ஓட்டங்களுடனும் களததில் உள்ளனர். பந்து வீச்சில் சஹீர்கான் 2 விக்கெட்டுக்களையும், இர்பான்பதான் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும். இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வி இன்றி நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மேற்கிந்திய தீவின் லாறா தலைமையிலான முன்னணி வீரர்கள் அணிக்குத் திரும்பினர்



மேற்கிந்தியத்தீவுவீரர்களுக்கும், கிரிக்கெட் சபைக்கும் இடையிலான விளம்பர ஒப்பந்த பிரச்சினை முடிவிற்கு வந்துள்ளது. இதனால் தலைவர் பிரையன் லாறா உள்ளிட்ட 15 வீரர்களும் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேற்கிந்திய தீவு அணி முத்தரப்பு ஒரு நாள் தொடரில் பங்கேற்பதற்காக அடுத்த ஆண்டு (2005) சனவரி மாதம் அவுஸ்திரேலிய பயணம் மேற்கொள்ள உள்ளது. இத்தொடருக்கான புதிய விளம்பர ஒப்பந்தம் தொடர்பாக மேற்கிந்தியத் தீவு கிரிக்கெட் சபைக்கும் வீரர்களுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது. தலைவர் லாறா உட்பட 15 முன்னணி வீரர்கள் இப்புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுப்புத் தெரிவித்தனர். இதனால் அவுஸ்திரேலிய தொடருக்கான அணியில் இருந்து அவர்கள் நீக்கப்படுவதாக மேற்கிந்தியத் தீவு கிரிக்கெட் சபை அறிவித்தது.

முக்கிய வீரர்களைத் தவிர இரண்டாம் தர அணியை அனுப்ப நினைத்தால் மேற்கிந்தியத் தீவு அணி தொடரிலிருந்து நீக்கப்படும் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்தது.

இதனால் இப்பிரச்சினை குறித்து கிரீனிடா பிரதமர் கெய்த மிட்செலும், பார்படோசின் விளையாட்டுத்துறை அமைச்சர் ரிஜினல்ட் பேர்லே இருவரும் நடுவராக இருந்து கிரிக்கெட் சபை வீரர்களுக்கிடையே பேச்சுவார்த்தை நடத்தினர். ஒரு நாளுக்கும் மேலாக நடந்த இப்பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் சுமூகமான முடிவுக்கு வந்தது.

இதைத் தொடர்ந்து லாறா உள்ளிட்ட மற்ற வீரர்கள் அனைவரும் மீண்டும் அணியில் தேர்வு செய்யப்படுவார்கள் என கிரிக்கெட்சபை கூறியது. பயிற்சி முகாமிலும் வீரர்கள் விளையாட சம்மதம் தெரிவித்துள்ளனர். இதனால் மேற்கிந்தியத்தீவு அணியின் அவுஸ்திரேலியப் பயணம் திட்டமிட்டபடி நடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கால்பந்து சங்கத்தின் நிறைவேற்று அதிகாரியாக இங்கிலாந்தின் பிரையன் பார்வீக் நியமனம்



விளையாட்டு ஒளிபரப்பு ஐ.ரீ.வி.யின் கட்டுப்பாட்டாளராக கடமையாற்றிய இங்கிலாந்தின் பிரையன் பார்வீக் கால்பந்தாட்ட சங்கத்தின் நிறைவேற்றதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த ஒகஸ்ட்டில் மார்க் பிலியோஸ் விலகியதையடுத்து அவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இப் பணிக்காக றிச்சர்ட் பௌக்ரும், ஜோன் ஹிட்டனும் போட்டியிட்டனர். எனினும் 50 வயது நிரம்பிய பார்விக்குக்கே இடம் கிடைத்தது. சங்கத்தின் தலைவர் ஜெப்தோம்ஸன் இவரின் நியமனம் சங்கத்திற்கு கிடைத்த மகிழ்ச்சி தரும் செய்தியாகும் என்று தெரிவித்துள்ளதுடன், உதைபந்தாட்டத்தின் விருத்தியும் வெம்பிலி மைதானத்தின் அபிவிருத்தியும் உயர்வு பெறும் என்று கூறியுள்ளார்.

இங்கிலாந்தின் விளையாட்டுத்துறை அமைச்சர் றிச்சர்ட் காபோர்னும் பார்விக்கின் நியமனத்தை வரவேற்றுள்ளதுடன் கால்பந்தாட்ட சம்மேளனத்தை உயர்த்த எடுத்த முதல் நடவடிக்கை என்றும் தெரிவித்தார்.

சம்மேளனத்துக்கு புதிய நிறைவேற்று அதிகாரி நியமனம் செய்வதில் பலத்த சந்தேகங்கள் எழுந்திருந்த போதும் இறுதியாக வாக்கெடுப்பு நடத்தப்பட்டு பிரையன் பார்விக் வெற்றிபெற்றார்.

# எஸ்டோனியா செஸ் போட்டி

# ஆனந்த் முன்னிலையில்

எஸ்டோனியா நாட்டில் முன்னணி வீரர்கள் கலந்து கொண்ட செஸ் போட்டி நடைபெற்று வருகின்றது. இந்திய கிராண்ட் மாஸ்டர் விசுவநாதன் ஆனந்த் 2ஆவது சுற்றில் எஸ்டோனியா நாட்டைச் சேர்ந்த கைட்டோவை எதிர்கொண்டார்.

55ஆவது காய் நகர்த்தலுக்குப் பிறகு ஆனந்த் இதில் வெற்றி பெற்றார். 2ஆவது சுற்று முடிவில் ஆனந்த் 2 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளார். காலிப்மேன் (ரஷ்யா), எரிக்லோபரன் (ஜேர்மனி) ஆகியோர் தலா 15 புள்ளிகளுடன் உள்ளனர்.

# அவுஸ்திரேலிய அணியை தோற்கடித்து "ஹட்ரிக்" சாதனை நிகழ்த்துவோம்

## றொபின்சன்



அவுஸ்திரேலிய- அணியுடன் நடக்கவுள்ள போட்டியிலும் தாம் வென்று ஹட்ரிக் சாதனை நிகழ்த்தப் போவதாக இங்கிலாந்து றக்பி அணித்தலைவர் றொபின்சன் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியா கடந்த 1998 இற்கு பின்பு இங்கிலாந்துடனான போட்டிகளில் வெல்லவில்லை.

அவுஸ்திரேலிய- அணிக்குள் பல முக்கிய மாற்றங்களை மேற்கொண்டிருப்பினும் 12 மாதங்களுக்கு முன்பு நடந்த உலகக் கிண்ணப் போட்டிகளிலும் அது சாதிக்கவில்லை. அவ் அணி பின் தங்கி இருப்பதாலும் தென்னாபிரிக்காவை கடந்த சனியன்று நடைபெற்ற போட்டியில் வென்றதாலும் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி சாதனை நிகழ்த்தப் போவதாக அவர் தெரிவித்துள்ளார். ஆயினும் இதனை முறியடிக்கும் விதத்தில் நாங்களும் திறமையுடன் ஆடுவோம் என அவுஸ்திரேலிய றக்பி அணியினர் நம்பிக்கை வெளியிட்டுள்னர்.





(படம் : பிரதீபன்)



மாவீரர் நாளை முன்னிட்டு மன்னாரில் நடத்தப்பட்ட மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்கான வலைப் பந்தாட்டபோட்டியில் இறுதி ஆட்டத்திற்கு தெரிவான மன்னார் சித்திவிநாயகர் விளையாட்டுக்கழகமும், மன்னார் பள்ளிமுனை லுசியா விளையாட்டுக்கழக வீராங்கனைகளை படத்தில் காணலாம்.

## சிந்தனைக்கு



போராட்ட வடிவங்கள் மாறலாம்; ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப் போவதில்லை

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 29-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## எல்லைக்கோட்டில் !

தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் இவ் ஆண்டிற்கான மாவீரர் தின உரையில் நிதானமாகவும், உறுதியாகவும் தெளிவாகவும் சில விடயங்களைச் சிறிலங்கா அர சாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும்கூறவும் தவறவில்லை.

“பொறுமைக்கும், எதிர்பார்ப்பிற்கும் எல்லைக்கோடுகள் உள்ளன. அந்த எல்லைக்கோடுகளை நாம் அடைந்துவிட்டோம்” என்ற தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களது அழுத்தம், திருத்தமான கூற்றுக்கள் சிறிலங்கா அரசிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் தெளிவானதொரு தகவலைத் தெளிவாகக் கூறுகின்றது.

இத்தகவலானது தற்போதைய சூழ்நிலையானது நீடிப்பதற்கு அனுமதிக்கப்பட முடியாதது என்பதே அதுவாகும். இது குறித்து தனது உரையில் குறிப்பிடும் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள், “தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றிலே என்றுமில்லாதவாறு ஓர் இக் கட்டான சிக்கலான சூழ்நிலையை நாம் இங்கு எதிர் நோக்கியுள்ளோம்....... நாம் ஒரு அரசியல் வெறுமைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த அரசியற் சூழ்நிலை நீடித்தால் எமது இலட்சியப் போராட்டத்திற்கு பெரும்பங்கத்தை ஏற்படுத்திவிடும் என்பது திண்ணம” எனக் குறிப்பிடுகின்றார்.

இதன்மூலம் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டிய முக்கிய மான காலகட்டத்திற்குள் விடுதலைப்புலிகளும், தமிழ் மக்களும் வந்துள்ளனர் என்பதை தேசியத்தலைவர் தெளிவாகவே சுட்டிக் காட்ட முனைகின்றார். இதேவேளை மறுபுறத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் படுவதை இழுத்தடித்து வருவதோடு, இனப்பிரச்சினைத் தீர்வில் அக்கறை காட்டுவதாக இல்லை என்பதையும் அவர் வலியுறுத்தத் தவறவில்லை.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பி. போன்ற முரண் பாடான போக்குடைய கட்சிகளின் அழுத்தத்திற்கு உட்பட்டு பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு நிபந்தனை விதிப்பதைச் சுட்டிக் காட்டும் தேசியத்தலைவர் சனாதிபதி சந்திரிகா கூறுவதுபோன்று இறுதித் தீர்வு பற்றிய பேச்சுக்களைத் தற்பொழுது ஆரம்பிப்ப தென்பது சாத்தியப்பாடானதொன்றல்ல என்பதையும் தெளிவுபடக் கூறியுள்ளார். யுத்தத்தினால் பாதிப்புற்றுள்ள தமிழ் மக்களின் உடனடியானதும் அத்தியாவசியமானதும் தேவை, வரலாற்று ரீதியி லான படிப்பினை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இறுதித் தீர்வு பற்றிய பேச்சுக்களை உடன் ஆரம்பிக்கமுடியாது என்பதைத் தேசியத்தலைவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இது குறித்துத் தனது உரையில் குறிப்பிடும் அவர், “காலம் கால மாக நாம் பேச்சுக்களை நடாத்தி உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் செய்து வஞ்சிக்கப்பட்ட வரலாற்றுப்பாதையில் மீள நடைபோட எமது இயக்கம் தயாராக இல்லை” எனத் தெரிவிப்பதோடு “சிங்கள பௌத்த பேரினவாத சக்திக்குட் புதைந்து கிடக்கும் அரசியல் அமைப்புக்களும், அதன் தலைமைத்துவங்களும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருபொழுதும் புரிந்து கொள்ளப்போவதில்லை” எனவும் தெரிவித்துள்ளார்.

இத்தகையதொரு நிலையில்தான் சிங்கள அரசியற் கட்சிகளும், அதன் தலைமைத்துவங்களும் இனப்பிரச்சினையின் அடிப்படைகள்- அதாவது தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பன குறித்து தமது கட்சிகளின் கொள்கைகளைஅதிகார பூர்வமாகப் பகிரங்கப்படுத்த வேண்டும் எனத் தேசியத்தலைவரினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இக் கோரிக்கையானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் சிங்கள அரசியற் கட்சிகளின் முரண்பாடுகள் வெளிக்கொண்டு வரப்படுவதற்கும் அதனைச் சர்வதேசம் புரிந்துகொள்வதற்கும் இது அவசியமானதாகும். அத்தோடு தமிழ் மக்கள் உறுதியான தீர்மானங்களுக்கு வருவதற்கும் தேவையாகும்.

சிங்களக்கட்சிகளின் முரண்பாடுகள், அரசியற் போட்டிகள், காலத்திற்குக்காலம் அவர் போடும் இனவாதக் கூச்சல்கள் என்பன இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சியில் முன்னேற்றகரமான எத்தகைய நடவடிக்கைக்கும் சாதகமானதாக அமையப் போவதில்லை.

இதன் காரணமாகவே “போருமின்றி, நிலையான சமாதான முமின்றி, இயல்பு நிலையுமின்றி இடைக்காலத் தீர்வும் இன்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்தும் சிறைப்பட்டுக்கொண்டிருக்க முடியாது” எனத் தெரி விக்கும் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள் இந்நிலையில் இருந்து உடனடியாக விடுபடும் வகையில் உடனடியாகப் பேச்சு வார்த்தைகளை அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும் என அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

தமிழர் தரப்பு பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பு விடுக்கப்படும் போதெல்லாம் சிங்கள ஆட்சியாளர்கள் அவற்றைத் தமிழர்தரப்பின் பலவீனமாகச் சித்தரிக்க முனைவதுண்டு. ஆனால் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களின் இவ்வேண்டுகோளை சிறிலங்கா ஆட்சியாளர் கடந்தகாலம் போன்றே நோக்குவார்களேயானால் அவர்கள் கள யதார்த்தத்தையும், அரசியல் யதார்த்தத்தையும் புரிந்துகொள்ளத் தவறுபவர்களாகவே இருக்க முடியும்.

ஏனெனில் இத்தகைய நிராகரிப்பு ஒன்று நிகழுமானால் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் குறிப்பிட்டது போன்று “நாம் எமது தேசிய விடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர வேறுவழியில்லை'' என்பதே நிதர்சனமானதாகிவிடும். ஏனெனில் பொறுமைக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் எல்லைக்கோடுகள் உள்ளன. அந்த எல்லைக்கோட்டினை விடுதலைப்புலிகளும், தமிழ் மக்களும் ஏற்கனவே தொட்டு விட்டனர்.

# அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு நிலைப்பாட்டில் ஐ.தே.க மாற்றம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதிலிருந்து ஐ.தே.க விலகிக் கொள்ளத் தீர்மானித்துள்ளதாக ஐ.தே.க வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள நோர்வே மற்றும் இந்தியத் தூதர்களுக்கு அறிவித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரான போராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அக் கட்சியின் தலைவர் மலிக் சமர விக்கிரம ஆகியோர் அஸ்கிரிய பீடாதிபதி வண.புத்திர கிட்ட தேரோவைச் சந்தித்து நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து விளக்கிக் கூறியுள்ளார்.

தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர் தின உரை குறித்தும் இந்தச் சந்திப்பின் போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

# அரசியல் நாகரீகமற்றமுறையில் சனாதிபதி நாடகமாடி வருகிறார்!

## பேராசிரியர் பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் குறித்து எதுவித அக்கறையும் கொள்ளாமல் அரசியல் நாகரீக மாற்ற முறையில் தனது பதவியை நீடிப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தன் வசம் எடுக்க முற்படுகின்றார் என முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சமாதான முயற்சிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவை கோருவதாக பகிரங்கமாக நடித்துக் கொண்டு அக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பதவி கொடுத்து தன்வசம் இழுக்க முற்படுகின்றனர் என்று ஐக்கிய தேசிய கட்சிப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டின் சமாதானத்திற்காக அல்லது பொருளாதாரத்திற்காக அல்லது தனது பதவி நீ[illegible]பிற்காக அவர் முக்கியத்துவம் கொடுக்கின்றார் என்பது குறித்து அறிய முடியாதவாறு தற்போது சிக்கல்கள் தோன்றியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஐ.தே.க.வின் ஒத்துழைப்பு சமாதான முன்னெடுப்பிற்கு தேவை என சனாதிபதி கோரினார். எமது கட்சித் தலைவர் அந்த ஒத்துழைப்பை எழுத்து மூலம் தெரிவித்திருந்தார். அப்படியிருந்தும் சமாதான முன்னெடுப்புகள் பற்றி எவ்வித அக்கறையும் கொள்ளாமல் அரசியலில் நாகரிகமற்ற முறையில் தனது பதவியை நீடிப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை தன்வசம் எடுக்க முற்படுகின்றார். இதன் மூலம் அரசியல் யாப்பை திருத்தி சட்ட விரோதமாக பதவிக் காலத்தை நீடிக்க முற்படுகின்றார் என்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்

## தலைவர் பிரபாவை வாழ்த்தி திருச்சியில் சுவரொட்டிகள்

தலைவர் பிரபாகரனின் 50 ஆவது பிறந்த நாளன்று அவரை வாழ்த்தி இந்தியாவின் திருச்சி நகரின் முக்கிய இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

தலைவர் பிரபாகரனின் அழகிய வர்ணப் படங்களுடன் கையெழுத்தில் வாழ்த்து எழுதப்பட்டு இச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இந்த சுவரொட்டிகளை திருச்சி மாவட்ட செயலர் அலுவலகம் மற்றும் சனநடமாட்டம் மிக்க இடங்களில் ஒட்டப்பட்ட இந்த சுவரொட்டிகள் திருச்சி பொலிசாருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. திடீரென ஒட்டப்பட்ட இந்த சுவ ரொட்டிகள் எங்கிருந்து கொண்டு வரப்பட்டன? ஒட்டியவர்கள் யார் என்பவை குறித்த விசாரணைகளை கியூ பிரிவு பொலிசார் ஆரம்பித் துள்ளனர்.

# ஈ.என்.டி.எல்.எப். பொதுச் செயலர் மனோமாஸ்ரர் கடத்தப்பட்டார்?

ஈ.என்.டி.எல்.எப். குழுவின் பொதுச் செயலாளரும் கருணாவுடன் மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந் தவருமான மனோ மாஸ்டர் எனப்படும் பா.இராஜரத்தினம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பல வருடங்களாக இந்தியாவில் தங்கியிருந்த மேற்படி நபர், கருணாவுடன் இணைந்து அரசியல் நடத்தும் முயற்சியில் கடந்த சில மாதங்களிற்கு முன்னர் நாடு திரும்பி தமது குழுவை புனரமைப்புச் செய்வதில் ஈடுபட்டு வந்தார். ஈ.என்.டி.எல்.எப். குழு இந்திய புலனாய்வு நி[illegible] வனங்களுடன் தொடர்புடை[illegible] என்பது இங்கு குறிப்பிடத்தக்[illegible]. மேற்படி குழு, கருணாவுடன் சேர்ந்து தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி என்ற அமைப்பை ஆரம்பித்ததாகவும், அதற்கு மேற்படி மனோ மாஸ்டர் என்பவரே இணைப்பாளர் என்றும், முகவரியற்ற கடிதத் தலைப்புகளில் இங்குள்ள ஊடகங்களுக்கு மர்மமான முறையில் அறிக்கைகள் அனுப்பி வைத்ததாகவும் தெரிய வருகின்றது. ஜே.வி.பி. போன்ற இனவாதக் கட்சிகள் மற்றும் ஈ.பி.டி.பி போன்ற அரச ஆதரவு ஆயுதக் குழுக்கள் இணைந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற் கொண்ட ஆர்ப்பாட்டங்களிலும் பத்திரிகையாளர் மாநாட்டிலும் கருணா சார்பு பிரதிநிதியாக இவர் கலந்து கொண்டார். கடந்த வெள்ளிக்கிழமை இரவு இவரது மெய்காப்பாளரான ரங்கப்பா எனப்படும் சனிபோய் ஒக்கர்ஸ் எலிசன் தெமட்டகொடவில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார் இதன் பின்பே இவர் காணாமல் போயுள்ளார். இவர் காணாமல் போன விடயம் மர்மமாக இருக்கின்றது என்பதுடன் பல்வேறு ஊகங்களும் இதுபற்றி நிலவுகின்றது. மட்டக்களப்பிலிருந்து வெளியேறிய கருணா ஆரம்பத்தில் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் அரவணைப்பில் இருந்தார். இதன் காரணமாக ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் கருத்து முரண்பட்டுக் கொண்டதுடன், யாழ் நகரில் டக்ளசிற்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டதுடன் அக்குழுவிலிருந்து வெளியேற ஆரம்பித்தனர். இந்நிலையில் நேரடியாக கருணாவை ஈ.பி.டி.பி. பகிரங்கப்படுத்த முடியாத நிலை தோன்றிய போது, ஈ.என்.டி.எல்.எப். என்ற ஆயுதக்குழுவுடன் இணைந்து செயற்பட முடிவெடுக்கப்பட்டது. எனினும், தற்போது மீண்டும் கருணா - டக்ளஸ் இணைந்து செயற்படும் விடயம் உறுதியாகியுள்ளதாகவும், இதன் காரணமாக ஈ.என்.டி.எல்.எப். இற்கும் கருணாவிற்கும் ஏற்பட்ட முறுகலின் எதிரொலியாகவே இவர் கடத்தப்பட்டிக்கலாம் என ஒரு தகவல் கூறுகின்றது.

## நீதி விவகாரங்களை ஆராய மக்கள் ஆணைக்குழு

### பத்து பொதுஅமைப்புக்கள் இணைந்து தீர்மானம்

(கொழும்பு)

பத்து முக்கிய பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து நாட்டின் நீதி சம்பந்தமாக ஆராய்வதற்காக மக்கள் ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்குத் தீர்மானம் எடுத்துள்ளது.

கடந்த 23ஆம் திகதி எடுக்கப்பட்ட இத்தீர்மானம் தொடர்பாக இந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சனாதிபதி சட்டத் தரணி கருத்துத் தெரிவிக்கையில்; மக்கள் ஆணைக்குழு இலங்கையில் நிறுவப்பட்டது இதுவே முதல் தடவை எனக் குறிப்பிட்டுள்ளார்.

# லெப்.கேணல் அன்பு நினைவுத்தூபி திறப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டானில் முன்னாள் முல்லை.மாவட்ட சிறப்புத் தளபதி லெப்.கேணல் அன்பு/(தாடி) யின் நினைவுத்தூபி புனரமைக்கப்பட்டு மீண்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாங்குளம் முல்லைத்தீவு வீதியில் வித்தியாபுரம் சந்தியில் உள்ள இந்த நினைவுத்தூபி கடந்த கால இராணுவ நடவடிக்கையின் போது சேதமாகி இருந்தது.

ஒட்டுசுட்டான் வன்னியன் தொழிலகத்தினர் இத்தூபியை மீளப்புனரமைத்து ஒட்டுசுட்டான் பிரதேசப் பொறுப்பாளர் கதிர் தலைமையில் நிதித்துறையைச் சேர்ந்த பொறுப்பாளர் பாண்டியன் திரை நீக்கம் செய்து திறந்து வைத்தார்.

நிகழ்வினை முறியடிப்பு படையணித் தளபதி மாசன் தேசியக் கொடியினை ஏற்றி ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினத்தின் செயலாளர் சி.வேதவனம் பிரதேச கோட்டப் பொறுப்பாளர் ஈழவன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# 8000 தென்னங்கன்றுகள் மாவீரர் தினத்தில் விநியோகம்

(ஒட்டுசுட்டான்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு ஐக்கிய இராஜ்ஜிய பொருண்மிய மதியுரையசந்தின் நிதியுதவியுடன் எண்ணாயிரம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லை.மாவட்டத்தில் முள்ளியவளை, அளம்பில், வன்னிவிளாங்குளம், ஆலங்குளம் ஆகிய துயிலும் இல்லங்களுக்கும் மன்னார். மாவட்டத்தில் பெரியபண்டிவிரிச்சான், ஆண்டான்குளம் ஆகிய துயிலும் இல்லங்களுக்கும், யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் துயிலும் இல்லத்திற்குமே இத் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. (05)

# துயிலுமில்லங்களில் சுடரேற்றல்



மணலாறு கமல் முகாம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மணலாறு பிராந்திய கட்டளைத் தளபதி இரா. மகேந்தி.



ஆண்டான்குளம் மா வீரர் துயிலுமில்லத்தில் வடபோர்முனைக் கட்டளை தளபதி கேணல் ஜெயம்.

# போர்ப்பறை வெளியீட்டகத்தினால் இரண்டு தமிழாக்க நூல்கள் வெளியீடு

போர்ப்பறை வெளியீட்டகத்தின் தமிழாக்கம் செய்யப்பட்ட நூல்களின் முதலாவது வெளியீட்டு நிகழ்ச்சி கடந்த 19ஆம் திகதி அன்று இடம்பெற்றது. இந்த நிகழ்ச்சியில் தப்பியவன் ஸ்கோர்ஸனியின் சிறப்பு நடவடிக்கைகள் எனும் இரண்டு தமிழாக்கம் செய்யப்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டன. தப்பியவன் போராளி சந்திரமதியினதும் ஸ்கோர்ஸனியின் சிறப்பு நடவடிக்கைகள் போராளி மாசனாலும் தமிழாக்கம் செய்யப்பட்டவை ஆகும். தப்பியவன் நூலை போராளி சந்திரமதி வெளியிட்டு வைக்க படைத்துறையைச் சேர்ந்த தினேஸ் மாஸ்ரர் பெற்றுக்கொண்டார். ஸ்கோர்ஸனியின் சிறப்பு நடவடிக்கைகள் நூலை போராளி கதிரவன் வெளியிட்டு வைக்க கேணல் யாழினி (விதுஷா) பெற்றுக்கொண்டார். இந்த நிகழ்ச்சியில் பெருமளவில் போராளிகள் கலந்து கொண்டனர்.





# நீதிபதியைக் கொல்லச் சிறையிலிருந்தே உத்தரவு வழங்கப்பட்டதாம்!

**- பிரதம நீதியரசர் சரத் என் சில்வா**

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத்அம்பேபிட்டியவை கொலை செய்வதற்கான உத்தரவை சிறையில் உள்ள பாதாள உலகக் குழுத்தலைவர் ஒருவர் வெளி யில் உள்ள தமது சகாக்களுக்கு உத்தரவு வழங்கியதாக பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார்.

இவர் நேற்று சிலாபத்தில் சட்டத்தரணிகள் சங்கக் கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார். மேல் நீதிமன்ற நீதிபதி சரத்அம்பேப்பிட்டியவின் கொலை தொடர்பாக புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாகவும், நீதிபதியை சுடும் உத்தரவை சிறையில் உள்ள பாதாள உலகக் குழுத் தலைவர் விடுத்துள்ளமையானது இலங்கையில் சட்டத்தையும், நீதித்துறையையும் பாரிய அளவில் பாதிக்கும் ஒரு விடயம் எனவும் நீதியரசர் சரத் என்.சில்வா மேலும் கூறினார்.

இதேவேளை சட்டத்தையும் நீதித்துறையும் உரிய முறையில் செயற்படாமையே அவற்றின் ஓட்டையைப் பயன்படுத்திக் கொண்டு இவ்வாறான செயல்கள் நடைபெறுவதாகவும், அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (32)

## ரணுவ...

பொறுப்பாளர் இ.கௌசல்யன், மாவடி முன்மாரிக் கோட்ட இராணுவத் தளபதி ரமணன், மூத்த தளபதி நாகேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பக்க சார்பாக...

தூதுவர் தமது மறுப்பை வெளியிட்டார். மேலும் அவர் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளுமே அடுத்த கட்ட நகர்வை மேற்கொள்ளவேண்டும். நோர்வே இதற்கான ஏற்பாட்டாளராக மட்டுமே செயற்படமுடியும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை நாட்டில் சமாதானம் ஏற்பட்டால் மாத்திரமே தென்னிலங்கையிலும் அபிவிருத்தி மேற்கொள்ளமுடியும் என்ற கருத்தைத் தாம் கொண்டிருப்பதாகவும் கூறினார்.

## மாவீரர்...

கள் பேரவை அறிக்கை ஒன்றில் கேட்டுள்ளது. எவ்விதமான வன்முறைக்கும் இடமளியாது சாத்வீக வழிகளில் பூரண எதிர்ப்பை திருமலை தமிழ் மக்கள் ஒன்று திரண்டு காட்ட வேண்டும் என்றும் பேரவை அழைப்பு விடுத்துள்ளது. (25)

## ஆண்டான்குளம்....

அவர்களால் மாலை 4.00 மணியவில் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து அங்கு வைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி அஞ்சலி செய்யப்பட்டது. இந்நிகழ்வில் போராளிகள், அரச அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச)

## கண்காணிப்புக்குழு...

மாவீரர் நாள் கொண்டாட முற்பட்ட போது மக்கள் மீது இராணுவத்தினர் மேற் கொண்ட தாக்குதலில் 6 பொதுமக்கள் காயங்களுக்குள்ளானார்கள் இதனை அடுத்தே ஆத்திரம் கொண்ட மக்களினால் வேப்பங்குளம் நெளுக்குளம் பகுதியில் அமைந்துள்ள பொலிசாரின் காவலரண்கள் இரவோடு இரவாகத் தாக்கப்பட்டது. அத்துடன் தீயிட்டும் கொழுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக பொலிசாரால் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவுக்கு முறையிடப்பட்டதை அடுத்து போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் விசாரணைகளினையும் மேற்கொண்டுள்ளனர்.

## அமெரிக்கா...

பினர் லாறி பேர்கஸ்ஸன் அவர்கள் வெளியிட்டு வைத்தார். சிறப்பு அம்சமாக தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் மாவீரர் நாள் உரை அகலத்திரையில் காண்பிக்கப்பட்டது. சின்னஞ் சிறுவர்களின் நாட்டிய நாடகங்கள், பாடல்கள் ஆகியவற்றுடன் மேலும் பல கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் ஆயிரக்கணக்கில் இந்த மாவீரர் நாள் நிகழ்வில் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டார்கள்.

இதேவேளை, அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வுகளில் அமெரிக்க மற்றும் தமிழீழ தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டு நிகழ்ச்சிகள் அகவணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து எழுச்சி நடனங்கள், விடுதலை கீதங்கள், கவிதாஞ்சலிகள் மற்றும் எழுச்சியுரைகள் ஆகியவை அரங்கு நிறைந்த மக்களுடன் மிகவும் எழுச்சிகரமாகவும், உணர்வுபூர்வமாகவும் நடந்தேறின. இந் நிகழ்வில் சிறப்புப் பேச்சாளர்களாக விடுதலைப் புலிகளின் சர்வதேச சட்ட ஆலோசகர் உருத்திரகுமார், உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு தலைவர் வைத்திய கலாநிதி ஜெயலிங்கம், உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பொறுப்பாளர் க.கருணாகரன் மற்றும் ஒஹாயோ மாநிலத்தில் இருந்து வருகைதந்தவரும், போராளிகளால் உஷன் அம்மா என்றழைக்கப்படுபவருமாகிய திருமதி சின்னத்தங்கம் சரவணமுத்து ஆகியோர்கள் எழுச்சியுரை ஆற்றினார்கள். இதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் எதிர்வரும் டிசம்பர் 4ஆம் திகதி லொஸ் ஏஞ்சல்ஸ், நியுயோர்சி/ புளோரிடா, சிக்காக்கோ, சியாற்றில், சான் பிரான்ஸிஸ்கோ ஆகிய இடங்களிலும், டிசம்பர் 5ம் திகதி ஒஹாயோ மாநிலத்திலும் மாவீரர் தினம் அனுஷ்டிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடாவில் டொரான்றோவில் ஆறு இடங்களில் மாவீரர்நாள் நிகழ்வுகள் வெகு விமர்சையாக நடைபெற்றன.பல ஆயிரக்கணக்கான ஈழத்தமிழ் மக்கள் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

# புது. பொன்னம்பலம் மருத்துவமனையில் மனநோய் மருத்துவ ஆலோசனை!

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து வருகை தந்துள்ள வைத்திய நிபுணர்களால் பொது மருத்துவமும், ஆலோசனைகளும், மனநோய் சம்பந்தமான மருத்துவமும் ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் பயன் பெற விரும்புவோர் 30.11.2004 ஆம் திகதி தொடக்கம் 01.12.2004 ஆம்திகதி வரை காலை 8.00 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரைமேற்படி மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவிற்கு வருகை தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் வைத்திய கலாநிதி சூரியகுமாரனினால் பொது மருத்துவமும் ஆலோசனைகளும், உளநல நிபுணர் சாந்தி சூரியகுமாரனினாலும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.